வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிமாற்றம்
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 22.04.2024 திங்கட்கிழமை | இதழ் : 113 | பக்கங்கள் : 12

# பாதையை விட்டு விலகிய பந்தய காரால் எழுவர் பலி!

## 24 பேர் படுகாயம் சிலரின் நிலை கவலைக்கிடம்!



கொழும்பு, ஏப். 22

கடுகதி வேகத்தில் பந்தயத்தில் ஓடிக் கொண்டிருந்த கார் கட்டுப்பாட்டை இழந்து பார்வையாளர்களை மோதிய தில் 7 பேர் உயிரிழந்தனர். 24 பேர் படு காயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டா ரங்கள் தெரிவித்தன.

இறந்தவர்களில் 8 வயது சிறுமி ஒரு வரும் 6 ஆண்களும் அடங்குவர். நால்வர் பந்தயத்தின் அதிகாரிகளா வர் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

இராணுவ அக்கடமியின் ஏற் பாட்டில் நடந்த “பொக்ஸ் ஹில் சுப்பர் குறோஸ் 2024” கார்

11



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் கொழும்பு - கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் கொல்லப் பட்டவர்களில் ஒருவரின் உறவினர் நேற்று ஐந்தாவது ஆண்டு நினைவேந்தலில் அஞ்சலி செலுத்துகிறார்...!

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்

# உண்மைகளை கண்டறிவதற்கு மீண்டும் விசாரணை அவசியம்!

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, ஏப்ரல் 22

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி யில் உள்ள அனைத்து உண்மைகளையும் கண் டறிய சுதந்திரமானதும் நியாயமானதுமான விசா ரணையை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும். நீதியை மறைத்துவைக்க முடியாது - இவ்வாறு தெரிவித்துள்ளார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.**

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத் தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலக ளில் கொல்லப்பட்டோரின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் நேற்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்றது.

தனக்கு நெருக்கமான அமைப்புகளை சேர்ந்த நபர்களை கைது செய்யவேண்டி யிருக்கும் என்பதால் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாது என்று கோட்டாபய ராஜ பக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த வேளை தன்னிடம் தெரிவித்தார் - என் றும் அவர் கூறினார். (ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பொறுப்புக்கூறல் அவசியம்!

## ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்து



கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் அவசி யம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வலியு றுத்தியுள்ளார்.

கடந்த 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று

11



# மட்டு. சீயோன் தேவாலயத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி!

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொல்லப்பட்டோர் நேற்று நினைவு கூரப்பட்டனர்.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொல்லப்பட் டவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கொல்லப்பட்டோர் நினைவாக மலர்கள் தூவி யும் மெழுகுதிரி ஏற்றியும் அஞ்சலி செலுத்தப்பட் டது.

11

### ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோர்

# உணர்வெழுச்சியுடன் நாடு முழுவதும் அஞ்சலி!

கொழும்பு, ஏப். 22

2019 ஏப்ரல் 21ஆம் நாள் கொல்லப்பட்டவர்கள் நேற்று நாடு முழுவதும் உணர்வெழுச்சியுடன் நினை வேந்தப்பட்டனர்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 253 பேர் கொல் லப்பட்டனர். 500இற்கும் மேற்பட்டவர்கள் படு காயம் மற்றும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர் களின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் நேற்று

11



# சுதந்திர கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸ!

## தெரிவு செய்தது மைத்திரி அணி

கொழும்பு, ஏப். 22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அணியினர் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ஷவை தெரிவு செய்துள்ளனர் என்று தெரி விக்கப்பட்டது.

கொழும்பு - எதுல் கோட்டையில் நேற்று

11

# 1,700 ரூபாய் சம்பளம் கோரி பல இடங்களில் ஆர்ப்பாட்டம்!

நுவரெலியா, ஏப். 22

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாயை அடிப்படை நாள் சம்பளம் வழங்கக் கோரி தொழிலாளர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் நேற்று பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மலையகத்தின் முக்கிய நகரங்களான கொட்ட கலை, அக்கரப்பத்தனை, நானு ஓயா நகரங்களில்

11

# இப்படியும் நடக்கிறது

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரி ஜனாதிபதியான கதை நமக்குத் தெரிந்ததுதான். நமக்குத்தான் ஞாபக மறதி அதிகம் என்பதால் சில விடயங்களை ஞாபகப்படுத்துவது நல்லதுதானே.

தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்பாளர்கள் தெரிவு நடந்துகொண்டிருந்தபோது கடைசி நேரத்தில் - அதாவது, காலை அலரி மாளிகையில் மகிந்தவுடன் அப்பம் சாப்பிட்டுவிட்டு மாலை ரணில் தரப்பின் பொது வேட்பாளரானார் மைத்திரி. அப்போது அவர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர். கட்சிக்கு தலைவர் மகிந்த ராஜபக்ஷ தான். கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அவர் வெளியேறிவிட்டார் என்று அப்போதே அவரை கட்சியிலிருந்து நீக்கியிருந்தால் மைத்திரி அப்போதே கட்சி இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியில்தான் சங்கமமாகியிருக்க வேண்டும்.

ஆனால், மகிந்த தான்தானே வெற்றிபெறப்போகின்றவன் என்ற நம்பிக்கையில் - அப்படியோர் அதீத நம்பிக்கை இருந்ததால்தானே மனுசன் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு ஆண்டுகள் இருக்கும்போதே முன்னதாக தேர்தலுக்கு சென்றார்.

அந்த வெற்றி நம்பிக்கையில் அப்போது மைத்திரிமீது கட்சி நடவடிக்கை எடுப்பது பற்றி அவர் சிந்தித்திருக்கவில்லை. அதனால், மைத்திரி வெற்றிபெற்று ஜனாதிபதி ஆகிய போது அவர் சுதந்திரக் கட்சியின் செயலாளராகவே இருந்தார். சுதந்திரக் கட்சியின் யாப்பின்படி அந்தக் கட்சியில் ஒருவர் ஜனாதிபதியானால் கட்சித் தலைமையும் அவரிடமே வந்துவிடவேண்டும் என்பதால் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி மைத்திரியிடம் வந்தது. ஆனால், முன்னதாகவே அவரை கட்சியிலிருந்து நீக்கியிருந்தால் அந்தப் பதவிக்கு அவர் வந்திருக்கமுடியாது.

சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி பதவிக்கு வந்ததும் அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற யு. பி. எவ். ஏ. என்ற கூட்டணியில் இருந்த சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் பலர் மைத்திரியுடன் இணைந்து அமைச்சரானார்கள். யு. பி. எவ். ஏயில் இருந்த மகிந்த ஆதரவாளர்கள் தொடர்ந்து அவரோடு யு. பி. எவ். ஏ. எம்.பிக்களாகத் தொடர்ந்தனர்.

மைத்திரியின் “நல்லாட்சி“யின் நூறு நாள் வேலைத் திட்டத்துக்கு மகிந்த ஆதரவான யு. பி. எவ். ஏ. எம்.பிக்களும் தொடர்ந்து ஆதரவளித்து வந்ததால் 19ஆவது அரசியலமைப்பு திருத்த மசோதாவைக்கூட நல்லாட்சி அரச காலத்தில் நிறைவேற்ற முடிந்தது. பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் மைத்திரி யு. பி. எவ். ஏ. இன் தலைவராகவும் தொடர, மகிந்த பாராளுமன்றத் தேர்தலில் குருநாகலில் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் யு. பி. எவ். ஏ. வெற்றிபெற்றால் மகிந்தவே பிரதமராக நியமிக்கப்படுவார் என்று ஆரம்பத்தில் உறுதியளித்திருந்தார் மைத்திரி. அவர் அவ்வாறு உறுதியளித்தது மகிந்த வெற்றி பெறமாட்டார் என்ற நம்பிக்கையிலேயே என்பது பின்னர் தெரியவந்தது. மகிந்த தலைமையிலான யு. பி. எவ். ஏ. வேட்பாளர்களே அதிக வாக்குகளைப் பெறுவார்கள் என்று கடைசி நேரத்தில் நம்பப்பட்டதால் கடைசி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து யு. பி. எவ். ஏ. வெற்றிபெற்றாலும் மகிந்தவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று மைத்திரி அறிவிக்க கடைசி நேரத்தில் தேர்தல் களம் திடீர் மாற்றமடைந்தது.

இந்த அறிவிப்பால் ஐ. தே. கவை விட யு. பி. எவ். ஏ. மூன்று இலட்சம் வாக்குகள் மட்டுமே குறைவாகப் பெற்று தோல்வியடைந்தது. அதற்குப் பின்னரே, மகிந்த சுதந்திரக் கட்சி தலைமையிலான யு. பி. எவ். ஏயில் இருப்பது தனது எதிர்காலத்துக்கு சிறந்தது அல்ல என்று முடிவெடுத்து சிறீ லங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியை ஆரம்பித்தார்.

இந்த பழைய சங்கதிகளை எல்லாம் எதற்காக எழுதுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம்.

தனிக்கட்சி ஆரம்பித்த மகிந்த ராஜபக்ஷ இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு தனது பலத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தப் பயன்படுத்தியது அந்த ஆண்டு நடந்த மே தினத்தைத் தான். கொழும்பு காலிமுகத்திடலில் இலட்சம் மக்களை கொண்டுவந்து காட்டி, தமது பலத்தை மகிந்த தரப்பினர் வெளிக்காட்டியதுதான் அவர்களின் பின்னைய வெற்றிகளுக்கு வழிசமைத்து. அந்த மே தினத்திற்கு பின்னர் ஆறு மாதங்களில் உள்ளூராட்சி தேர்தலுக்கான அறிவிப்புகள் வெளியாக அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடந்த அந்த உள்ளூராட்சி தேர்தலில் மகிந்தவின் புதிய கட் பொதுஜன பெரமுன அமோக வெற்றியீட்டி தமது பலத்தை வெளிக்கட்டியது.

அந்த மே தினத்தை எப்படி மகிந்த தரப்பு பயன்படுத்தியதோ அதே போல, இன்னமும் பத்து நாட்களில் நடைபெறவிருக்கும் மே தினத்தில் தமது பலத்தை வெளிக்காட்ட அனேகமாக எல்லா கட்சிகளுமே தயாராகி வருகின்றன என்பதுதான் இப்போது தெற்கில் பேசப்படுகின்ற முக்கிய விடயமாக இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த மே தின கூட்டத்தில் மற்றைய எல்லா கட்சிகளையும்விட அதிக மக்களைக் கொண்டுவந்து காட்டி தமது பலத்தை வெளிப்படுத்த இருக்கின்றது என்கிறார் ஐ. தே. கவின் முக்கிய தலைவர் ஒருவர்.

அந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் பதினான்கு பேராவது மேடையேறுவார்கள் என்ற அவரின் நம்பிக்கை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு முக்கிய தலைவரிடம் கேட்டேன். அவர் சொன்னார்:

“இரண்டாயிரத்து பதினைந்து தேர்தலில் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரியை இந்தப் பக்கம் கொண்டுவருவதில் முக்கிய பங்காற்றியவர் சந்திரிகா பண்டாரநாயக்கா. அவர் எமது முதலாவது கூட்டத்தில் சுதந்திரக் கட்சியிலிருந்து 30 தலைவர்கள் மேடையேறுவார்கள் என்றார். ஆனால், அப்படி மேடை ஏறியவர்கள் நால்வர் மட்டுமே. அதேபோலத்தான் பதினைந்து என்று அவர்கள் சொன்னாலும் மூன்றோ அல்லது நான்கு பேரோ மேடையேறலாம்“ என்றார்.

ஒரு குசும்புக்கு: இப்படி இந்த ஊர்க்குருவியிடம் சொன்னவர் நிச்சயம் மேடையேறத்தான் போகின்றார்.!

**- ஊர்க்குருவி.**









உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு தினமான நேற்று கொச்சிக் கடை அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில்....!









## விமான நிலையத்தில் திருடிய தம்பதி கைது!

கொழும்பு, ஏப். 22

தொழிலதிபர் ஒருவரின் பயணப் பொதிகளை திருடிய தம்பதியரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட தம்பதியர் இருவரும் 36, 35 வயதுடையவர்களாவர்.

தொழிலதிபர் வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாய்க்கு மாற்றும் சந்தர்ப்பத்தில் அவரின் உடைமைகளை இவர்கள் அபகரித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் தொழிலதிபர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை செய்த பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்து நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போதே சந்தேக நபர்களை எதிர்வரும் மே 2ஆம் திகதி வரை மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

(ஐ)

## போலி இணையத்தளங்கள் பாவனையிலிருந்து நீக்கம்

கொழும்பு, ஏப். 22

தபால் திணைக்களத்தின் இணையத்தளத்தைப் போன்று வடிவமைக்கப்பட்ட ஐந்து போலி இணையத்தளங்கள் நீக்கப்பட்டன என்று இலங்கை கணினி அவசர பதில் மன்றம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த இணையத்தளங்களில் சுமார் முப்பத்தைந்து பண மோசடி சம்பவங்கள் பதிவாகின என்று அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனோ பொல தெரிவித்தார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
22.04.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், சித்திரை 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈஸ்டர் தாக்குதல் - ஐந்து ஆண்டுகள்

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஐந்தாவது ஆண்டு நினைவு கொள்ளப்பட்டிருக்கின்றது. நீதி வேண்டுமென்று மட்டக்களப்பில் பேரணியொன்று நடைபெற்றிருக்கின்றது. இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களைப் போன்று பத்தோடு பதினொன்றாகவே இதுவும் கழிந்து செல்கின்றது. ஆனால், ஏனைய விடயங்களை விடவும் இது முற்றிலும் வேறானது. ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் முற்றிலும் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புடன் தொடர்பானது. உள்ளூர் விடயங்களுக்கான நீதியே முயல் கொம்பாக இருக்கின்றபோது எவ்வாறு சர்வதேச பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றுக்கான நீதியை இலங்கையில் காண முடியும்?

முள்ளிவாய்க்கால் அவலம் இடம்பெற்று பதினைந்து ஆண்டுகளாகின்றன. இந்த பதினைந்து ஆண்டுகளில் நீதிக்கான கோரிக்கையே தமிழர்களின் பிரதான அரசியலாக இருந்தது. அவ்வாறானதோர் எதிர்பார்ப்பின் அடிப்படையில்தான் தமிழ்த் தேசிய கட்சிகளும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டின. இறுதியில் தமிழர்களின் நீதிக்கான தேடல் இலவு காத்த கிளியானதே வரலாறு. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஈஸ்டர் தாக்குதலுக்கான நீதியை கொழும்பு பேராயர் இல்லம் தொடர்ந்தும் கோரி வருகின்றது. இது தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தை நாடப் போவதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் பேராயர் இல்லம் மேற்கொள்ளவில்லை.

ஈஸ்டர் தாக்குதல் மிகவும் தெளிவாகக் கத்தோலிக்க சமூகத்தையும் மேற்குலக பிரஜைகளையும் (கத்தோலிக்கர்கள்) இலக்கு வைத்தே முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தப் பின்புலத்தில் இதில், உள்நாட்டு அரசியல் சக்திகளுக்கு தொடர்பு இருப்பது உண்மையாயின் இது ஒரு பாரதூரமான பிரச்னை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இடம்பெற்றவை என்று கூறப்படும் மனித உரிமைகள் மீறலை கையாண்டதுபோன்று ஈஸ்டர் தாக்குதலை கையாள முடியாது. கொல்லப்பட்டிருப்பது கத்தோலிக்க மக்கள், வெளிநாட்டு பிரஜைகள் என்னும் அடிப்படையில் ஒரு கத்தோலிக்க நாட்டின் உதவியுடன் இந்த விடயத்தை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியும். பேராயர் இல்லத்தால் இதனை செய்ய முடியும். ஆனால், இதுவரையில் பேராயர் இல்லம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து இதன் பின்னால் ஒரு வெளிநாடு இருப்பதாகவும் அது எதுவென்று தனக்குத் தெரியுமென்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறியிருந்தார். ஆனால், அவர் இதுவரையில் அந்த நாடு எது என்பதை வெளிப்படுத்தவில்லை. ஒன்றில் அவர் தனக்குத் தெரிந்ததை மறைக்கின்றார் அல்லது அவர் பொய் கூறுகின்றார் - இந்த இரண்டில் ஒன்றுதானே அவரது அமைதிக்கு பின்னால் இருக்க முடியும்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பல்வேறு சர்சைக்குரிய தகவல்கள் வெளியாகியிருந்தன. இறுதியாக, சனல் - 4 வெளியிட்ட காணொலி புதிய சர்ச்சையொன்றை முன்வைத்திருந்தது. கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவருதற்கான ஒரு சதி முயற்சியாகவே இது இடம்பெற்றதாகவே குறித்த காணொலி வெளிப்படுத்தியது. அது உண்மையெனின், இது ஒரு பாரதூரான விடயம்.

சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு ஒன்றைத் திட்டமிட்டு ஒரு நாட்டுக்குள் அனுமதித்திருந்தால் சர்வதேச ரீதியில் இலங்கையை தனிமைப்படுத்துவதற்கான ஒரு வலுவான ஆதாரமாக இதனைப் பயன்படுத்தலாம். ஆனால், அப்படி எதுவும் நடைபெறவில்லை. நாங்கள் வந்தால் இதனை விசாரிப்போம் என்றவாறான அறிக்கைகளே வெளிவருகின்றன. இது போன்ற ஏராளமான அறிக்கைகளை இலங்கையர்கள் காலத்துக்குக் காலம் கண்டிருக்கின்றனர்.

# மாகாண சுகாதார துறை சார்ந்த சவால்களை எதிர்கொள்ள தயார்

## வடக்கு ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 22

மாகாணத்தில் சுகாதாரத் துறையில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளார் என்று வட மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் சேவையாற்றும் சுகாதார துறைசார்ந்த உயர் அதிகாரிகளுக்கும், ஆளுநருக்கும் இடையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில் சுகாதார சேவையை முன்னெடுப்பதில் மாவட்ட ரீதியில் காணப்படும் இடர்கள் தொடர்பில் அதிகாரிகளால் ஆளுநருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

சில பகுதிகளில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும், பௌதிக வளப் பற்றாக்குறை பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஆளுநர்,

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாத்து கரிசனையுடன் செயல்பட வேண்டிய பொறுப்பு சுகாதார அதிகாரிகளிடம் உள்ளது. கொள்கைகளை பின்பற்றி அதிகாரிகள் செயல்பட வேண்டும். அத்துடன் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளார் என்று ஆளுநர் கூறினார்.

(ஐ)

# குற்ற சம்பவங்கள் குறைவடைந்தன!

## யுக்திய நடவடிக்கையே காரணம்

கொழும்பு, ஏப். 22

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் பொலிஸ் நிலையங்களில் பதிவாகும் குற்றங்கள் வீதி விபத்துகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

யுக்திய நடவடிக்கை காரணமாகவே குற்றச் செயல்கள் குறைந்துள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 10 - 17ஆம் திகதி வரை இதே காலப்பகுதியில் கடந்த வருடம் பதிவான குற்றங்கள் மற்றும் விபத்துகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயம் வெளியாகியுள்ளது.

2023 இல் 26 கொலை சம்பவங்கள் பதிவாகின. இது இந்த ஆண்டில் 20 ஆகக் குறைவடைந்துள்ளது. மோதல்களில் ஏற்பட்ட காய சம்பவங்கள் 507 இலிருந்து 389ஆகக் குறைவடைந்துள்ளது.

இதேபோன்று மோதல் சம்பவங்கள் 4 ஆயிரத்து 431இலிருந்து 4 ஆயிரத்து 18 ஆகக் குறைந்துள்ளன. திருட்டு வழக்குகள் 339ல் இருந்து 244 ஆகக் குறைந்துள்ளது. வீடுடைப்பு சம்பவங்கள் 195இலிருந்து 150 ஆகக் குறைந்துள்ளது. நகை பறிப்பு 29இலிருந்து 23 ஆகவும் தீயில் எரிந்த சம்பவங்கள் 48இல் இருந்து 46 ஆகவும் குறைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய நடவடிக்கையே இதற்குக் காரணம் என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேசிய அரிசி வழங்கும் நிகழ்ச்சி திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 22

குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஏப்ரல், மே மாதங்களுக்கு தலா 10 கிலோ அரிசி வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தேசிய அரிசி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை ஊவா பரணகம - அபகஸ்தோவ விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பித்து வைத்த பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதேவேளை, குறைந்த வருமானம் பெறும் 28 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுவதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர்கள் சங்கம் தெரிவித்தது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**

உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும்.வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**

திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**

உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகி அமைதி திரும்பும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**துலாம்**

எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின்விருப்பங்களைநிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**தனுசு**

உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மீனம்**

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

# தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் மறுவாக்கு பதிவு நடைபெறாது!

## தேர்தல் ஆணையக தமிழ்நாடு அதிகாரி

சென்னை, ஏப். 22

தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் மறுவாக்கப் பதிவு நடைபெறாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தலில் முதல் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்நாடு - புதுச்சேரியில் முழுமையாக வாக்குப் பதிவு நடைபெற்றது. 69.2 வீதமானவர்கள் வாக்களித்திருந்ததனர்.

இந்த நிலையில், தேர்தல் ஆணையகத்தின் தமிழ்நாடு அதிகாரி சத்யபிரதா சாகு கருத்து வெளியிடுகையில்,

தமிழ்நாட்டில் சில வாக்குச் சாவடிகளில் தர்க்கம் ஏற்பட்ட போதிலும் மற்றும்படி அமைதியான முறையிலேயே தேர்தல் நடைபெற்றது. பொதுவாகத் தேர்தல் சமயத்தில் ஏதாவது, ஓரிடத்தில் குழப்பம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடியில் மட்டும் மறுவாக்குப் பதிவு நடத்தப்படும். ஆனால், இந்த முறை வாக்குப்பதிவில் பிரச்னை இல்லை என்பதால் எந்தவொரு வாக்குச்சாவடியிலும் மறுவாக்குப்பதிவு நடைபெறாது - என்றார்.

(ஐ)

# தமிழக அமைச்சர் உதயநிதி தண்டிக்கப்பட வேண்டியவர்

## தெலுங்கானா முதல்வர் கருத்து

ஹைதராபாத், ஏப். 22

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசியதற்காக தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை தண்டிக்க வேண்டும் என தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று அண்மையில் தமிழ்நாடு விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியிருந்தார். இந்த நிலையில், இந்தியா கூட்டணியிலேயே உள்ள தலைமை கட்சியான காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவரான தெலுங்கான முதல்வர் இவ்வாறு கூறியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி அந்த நிகழ்வில்,

"உதயநிதி ஸ்டாலினின் கருத்து தவறானது. அது அவரின் தனிப்பட்ட சிந்தனை. சனாதன தர்மம் குறித்த கருத்துக்காக நிச்சயம் அவர் தண்டிக்கப்பட வேண்டும். இக்கருத்தை "இந்தியா" கூட்டணி கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை" என்றார்.

தெலுங்கானாவில் மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், ரேவந்த் ரெட்டியின் இந்த கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ஐ)

# ஸ்டாலின் இந்தியா கூட்டணியை சிறப்பாக வழிநடத்தியிருந்தார்!

## காங்கிரஸ் கட்சி பாராட்டு

சென்னை, ஏப். 22

தமிழ்நாட்டில் "இந்தியா" கூட்டணியை ஒருங்கிணைத்து முதல்வர் மு. க. ஸ்டாலின் சிறப்பாக செயல்பட்டார் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மக்களவைத் தேர்தலின் முதல்கட்டம் தமிழகத்தில் அமைதியாக 70 சதவீத வாக்குப்பதிவுடன் நடந்து முடிந்திருக்கிறது. ஜனநாயகத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் இடையே நடைபெற்றதேர்தலில் தமிழக மக்கள் பெருவாரியாக 'இந்தியா' கூட்டணியை ஆதரிக்கும் வகையில் வாக்களித்திருக்கிறார்கள் என்ற உறுதியான செய்தி மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழகத்தில் தி. மு. க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து செயல்பட்ட பெருமை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உண்டு. தமிழகத்தின் உரிமைகளையும், நலன்களையும் கடந்த 10 ஆண்டுகளாக பறித்துவந்த பா. ஜ க. ஆட்சிக்கு உரிய பாடத்தை புகட்டும் வகையில் முதல்வர் மேற்கொண்ட கடுமையான பரப்புரையால் 'நாற்பதும் நமதே, நாளை நமதே, நாடும் நமதே' என்னும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது.

(ஐ)



உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நேற்று நடைபெற்றபோது...

# தையிட்டியில் விகாரைக்கு காணியை உரித்தாக்குக!

## தேசிய பாதுகாப்பு குழு கடிதம்

கொழும்பு, ஏப். 22

**தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை அமைக்கப்பட்ட தனியார் காணியை விகாரைக்கு உரித்தாக்கவும், காணிக்குரிய தமிழ் மக்களுக்கு வேறிடத்தில் காணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் இந்த நடவடிக்கையை ஒருமாத காலத்துக்குள் முடிவுறுத்துமாறும் வலி. வடக்கு பிரதேச செயலாளருக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.**

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத்வீரசேகரவை தலைமையாகக் கொண்ட மேற்படி குழுவின் செயலாளர் சூலா ஹேரத் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வலி. வடக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க திஸ்ஸ ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிப் பிரச்னை தொடர்பில் 05-03-2024 அன்று சரத் வீரசேகர தலைமையிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் பாராளுமன்ற குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த காணிப் பிரச்னையானது இன முரண்பாடுகளை மையப்படுத்தி வேரூன்றி இருப்பதாலும் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாலும் ஆழமாக ஆராயப்பட்டது.

இதனடிப்படையில் திஸ்ஸ ரஜமகா விகாரை அமைந்துள்ள காணிகள் உள்ளிட்ட அந்தப் பகுதியிலுள்ள காணிகளின் பதிவுகள் அனைத்தும் 2017ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், விகாரை அமைந்துள்ள காணியானது ஐந்து பகுதிகளாக பத்திரங்கள் வழங்கப்பட்டமை பாராளுமன்ற மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரையின் மூலம் தெரிய வந்துள்ளது.

இது இராணுவ அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம், 8. 98 ஏக்கர் பகுதியானது விகாரை கொண்டிருப்பது பட்டய நில அளவையாளர்களால் அளவீடு செய்து உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 1956ஆம் ஆண்டு வரைபடத்துக்கு அமைவாகவும், 1971ஆம் ஆண்டு நகர திட்டமிடல் வரைபடத்துக்கு அமைவாகவும் குறித்த விகாரை அமைந்துள்ள பகுதியில் உண்மையில் மேலதிகமான நிலங்கள் உள்ளனவா என்பதை கருத்தில் கொள்வது பொருத்தமானது.

அதனடிப்படையில், விகாரையை சுற்றியுள்ள காணிகளையும் விகாரை அமைந்துள்ள எல்லைக்குள் உள்ள காணிகளையும் அளவீடு செய்து விகாரை உள்ள பகுதியில் தனியார் காணிகள் காணப்படுமாயின் அதற்கு பதிலாக அருகாமையில் உள்ள வேறு பொருத்தமான காணிகளை அவர்களுக்கு வழங்குவதற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், திஸ்ஸ ரஜமகா விகாரைக்கு சொந்தமான காணியை முன்னுரிமை அடிப்படையில் விகாரைக்கு வழங்குவதோடு அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக அடுத்த ஒரு மாத காலத்துக்குள் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)





# யாழ். மரியன்னை பேராலயத்தில் ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், ஏப். 22

2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொல்லப்பட்டவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் யாழ். மரியன்னை பேராலயத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் 5ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, நேற்று யாழ்ப்பாணம் பெரிய கோயிலிலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. நேற்று நடந்த விசேட ஆராதனை நிகழ்வில் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தேவாலய பிரதான மணி ஒலிக்கப்பட்டு கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் ஜெயரட்ணம் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

அதனை தொடர்ந்து, உயிர் நீத்தவர்களை நினைவுகூரி பிரார்த்திக்கும் முகமாக மெழுகு வர்த்திகளும் ஏற்றப்பட்டன.

இந்த நிகழ்வில், ஏராளமான கிறிஸ்தவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பெருமளவினர் கலந்துகொண்டனர். (ஐ)

# பருத்தித்துறையில் தொற்றாநோய் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி

வடமராட்சி, ஏப். 22

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையினர் ஏ. ஐ. ஏ. காப்புறுதி நிறுவன அனுசரணையில் தொற்றா நோய் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை நேற்று நடத்தினர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் என். தயாளினி தலைமையில் இந்தப் பேரணி நேற்று காலை 6 மணிக்கு ஆரம்பமானது.

மருத்துவமனையில் ஆரம்பமான சைக்கிள் பவனி நெல்லியடி நகரத்தை அடைந்து அங்கிருந்து வதிரி சந்தி ஊடாக மாலைசந்தை பகுதியை அடைந்து மீண்டும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையை வந்தடைந்தது.

சென்று அங்கிருந்து வதிரிச் சந்தி ஊடாக மாலைசந்தி ஊடாக மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை சென்று அங்கு நிறைவடைந்தது.

விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை மருத்துவமனையின் அத்தியட்சகர் திருமதி என். தயாளினி, மகப்பேற்று நிபுணர் ஜெசிதரா, ஏ. ஐ. ஏ. நெல்லியடி கிளை முகாமையாளர் ரகுபரன், நெல்லியடி பொலிஸ் நிலைய போக்குவரத்து அதிகாரி ஆகியோர் நிகழ்வை தொடக்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ-02)




# மாணவியரிடம் இரட்டை அர்த்த வசனம்; தனியார் பஸ் நடத்துநர் தாக்கப்பட்டார்!

## மாணவியை கைது செய்த பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 22

பாடசாலை மாணவிகளை இரட்டை அர்த்த வசனத்தில் ஏசினார் என்று குற்றஞ்சாட்டி தனியார் பேருந்து நடத்துநர் ஒருவர் இளைஞர்கள் சிலரால் தாக்கப்பட்டு, கத்தியால் குத்தப்பட்டு காயப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதல் நடத்தியவர்களுக்குப் பதிலாக சம்பவத்துடன் தொடர்புடைய மாணவிகளில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கோண்டாவில் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ். நகரிலிருந்து தனியார் பேருந்தில் இரு பாடசாலை மாணவிகள் ஏறியுள்ளனர். அப்போது நடத்துநர், அருகில் இறங்குபவர்கள் ஆசனங்களில் அமராமல் எழுந்து நிற்கும்படியும் மாணவிகளை கீழே இறங்கி நின்றுவிட்டு, பேருந்து புறப்படும்போது ஏறுமாறும் கடும் தொனியில் கூறியுள்ளார். இதனால் மாணவிகளுக்கும் நடத்துநருக்குமிடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, இரட்டை அர்த்தம் தரும்விதமாக மாணவிகளை நடத்துநர் ஏசியுள்ளார். இதைத் தொடர்ந்து மாணவிகளை கீழே இறக்கிவிட்டு பேருந்து சென்றுள்ளது.

இது குறித்து மாணவிகளில் ஒருவர் தனது சகோதருக்கு கைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து, மாணவியின் சகோதரர்களும் நண்பர்களும் இணைந்து பேருந்தை இடைமறித்து நடத்துநரை தாக்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரித்த பொலிஸார் தாக்குதல் நடத்திய இளைஞர்களை தேடிய நிலையில் அவர்கள் தலைமறைவாகியிருந்தனர். இதைத் தொடர்ந்து, தாக்குதல் நடத்தப்படுவதற்கு காரணமானவர் என்ற குற்றச்சாட்டில் மாணவியை பொலிஸ் நிலையம் அழைத்த பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். (ஐ)

# ஊர்காவற்றுறை மருத்துவமனை அபிவிருத்திக்காக நடை பவனி!

யாழ்ப்பாணம், ஏப். 22

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை அபிவிருத்தி பணிக்கு நன்கொடை சேர்க்கும் நோக்கில் நடைபவனி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையும் யாழ். போதனா மருத்துவமனையும் இணைந்து இந்த நடைபவனியை நடத்தின. வட மாகாண பிராந்திய சுகாதார பணிமனையும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிமனையும் இதில் பங்கேற்றன.

ஊர்காவற்றுறை மருத்துவமனையில் நோயாளர் விடுதி அமைப்பதற்கு நன்கொடை பெறவும் மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாகவும் இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

யாழ். போதனா நேற்று காலை 6 மணியளவில் ஆரம்பமான இந்த நடைபவனி பண்ணை வீதி வழியாக சென்று, ஊர்காவற்றுறை மருத்துவமனையை அடைந்தது. (ஐ)

# இலங்கை - இந்தியா பாலம் இணைப்பை தொலைநோக்குடனேயே அணுகுகிறோம்!

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 22

**இந்தியாவுடனான நேரடி நில ரீதியான (பாலம்) இணைப்பை தொலைநோக்குடன் இலங்கை அணுகுகிறது என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் சமகால பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

இலங்கையின் பொருளாதாரத்தை உறுதியான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும். சுற்றுலாத்துறையை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மீள்புதுப்பிக்கதாக்க வலுசக்தி பயன்பாடுகள் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்பட வேண்டும். மறுபுறம் ஆசியா மாத்திரமன்றி உலக பொருளாதாரத்தின் கேந்திர நிலையத்திற்கான வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும்.

இதற்கு நாட்டில் உள்ள அனைத்து துறைமுகங்களையும் நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்ய வேண்டும். கொழும்பு துறைமுகத்தின் தென் முனையத்தில்தான் கூடுதல் செயல்பாடுகள் நடைபெறுகின்றன. கிழக்கு மற்றும் மேற்கு முனையங்களிலும் முக்கிய துறைமுக செயல்பாடுகள் நடைபெறுகின்றன. இவற்றை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்வது அவசியம்.

அப்போதுதான் இந்தியாவுக்கு செல்லும் சர்வதேச சரக்கு கப்பல்களின் பண்ட பரிமாற்ற நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொள்ள முடியும்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலுடன் சர்வதேச சரக்கு கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட மாற்றங்களினால் கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகள் அதிகரித்தன. இது இலங்கைக்கு நன்மையாகியது. இந்தியாவுடனான இணைப்புகள் குறித்து பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் கட்டுவதனூடாக நில ரீதியான நேரடி இணைப்பு ஏற்படுகிறது. இந்த இணைப்பின் ஊடாக இலங்கை எவ்வாறு நன்மை அடைய முடியும் என்ற தொலைநோக்கு பார்வை எமக்கு இருக்க வேண்டும். குறிப்பாக, தென்னிந்தியாவின் உற்பத்திகளின் ஏற்றுமதியில் இலங்கை துறைமுகங்கள் பயனடைய முடியும். குறிப்பாக கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களை தென்னிந்தியா தமது ஏற்றுமதிகளுக்காக பயன்படுத்த முடியும். இந்திய துறைமுகங்களை பயன்படுத்துவதை விட பொருளாதார ரீதியில் தென்னிந்தியாவுக்கு நன்மையளிக்கும்.

இவ்வாறான திட்டங்களினால் இலங்கைக்கு தொழில் வாய்ப்பு ரீதியான நன்மைகள் உள்ளிட்ட பல நன்மைகள் கிடைக்கும். அதே போன்று உற்பத்தி பொருளாதாரத்திலும் இலங்கை கூடிய கவனம் செலுத்த வேண்டியதுள்ளது. புதுப்பிக்கதக்க மின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி போன்ற துறைகளை கருத்தில் கொள்ள வேண்டியதுள்ளது. கனிய வளங்களை ஏற்றுமதி செய்யும் போது மூலப்பொருட்களாக அல்லாது முடிவுப்பொருட்களாக ஏற்றுமதி செய்ய வேண்டும். இதற்காக பல சர்வதேச நிறுவனங்களின் தொழிற்சாலைகளை உள்நாட்டில் நிர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயம் உள்ளிட்ட அனைத்து உற்பத்திகளையும் தேசிய பொருளாதாரத்துடன் இணைக்கும் திட்டத்தினை முன்னெடுக்க வேண்டும். இதனை மையப்படுத்தியதாகவே எமது நிலையான பொருளாதார அபிவிருத்தி திட்டம் உள்ளது - என்றார். (ஐ)

# ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் மே மாதம் இலங்கை வருகின்றார்

கொழும்பு, ஏப். 22

ஜப்பான் வெளிவிவகார ஹயாஷி யொஷிமஸா எதிர்வரும் மே மாத முற்பகுதியில் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வரவுள்ளார்.

அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா ஏற்கனவே கடந்த ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி இலங்கை வந்தார். ஜப்பானிய வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கைக்கான அவரின் முதல் பயணமாக இது அமைந்தது.

அவர் இலங்கை வந்தபோது, கடன் மறுசீரமைப்பு அவசியத்தை இலங்கைக்கு வலியுறுத்தியிருந்தார். இந்த நிலையில், எதிர்வரும் மே மாதம் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகிறார். எனினும், அவரின் வருகை குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இலங்கையின் பொருளாதார மீட்சி, கடன்மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜப்பான் அமைச்சரின் வருகையின்போது ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சீனாவின் முக்கிய தலைவர் இலங்கை வருகின்றார்!



கொழும்பு, ஏப். 22

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் துணை தலைவர் சன் ஹையன் இரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வரவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை (வருகை நாள் உறுதியாக வில்லை) இலங்கை வரும் அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரை சந்தித்து கலந்துரையாடுவார்.

அண்மையில், சீனா சென்றிருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன சீனாவின் கடன் மறுசீரமைப்பு ஒத்துழைப்பை கோரியிருந்தார்.

இந்த நிலையிலேயே சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் துணை அமைச்சர் சன் ஹையன் இலங்கை வருகிறார்.

இரு தரப்பு சந்திப்பின்போது, சீன ஆய்வுக் கப்பல்களுக்கு இலங்கை கடல் பரப்புக்குள் நுழைய விதிக்கப்பட்ட தொடர் தடை மற்றும் கடன் மீள் செலுத்துகை ஆகியவை குறித்து முக்கியமாகப் பேசப்படும் என்று கருதப்படுகின்றது. (ஐ)

# ஒருவர் குத்தி கொலை; சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஏப். 22

ஒருவரை குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கொலை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கிராண்ட்பாஸ் - அடுக்கு மாடி குடியிருப்புக்கு அருகில் குற்றப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 160 மில்லிகிராம், மற்றவரிடம் 8 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேக நபர்கள் 21 மற்றும் 23 வயதுடையவர்களாவர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# குளத்தில் நீராடிய சிறுவன் மரணம்!

சிலாபம், ஏப். 22

குடும்பத்துடன் குளத்தில் நீராட சென்ற 8 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

புத்தளம் - ஆராச்சிக்கட்டுவவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாயின் சகோதரியும், அவரது இரண்டு பிள்ளைகள் அவர்களின் அயலவர் குளத்தில் நீராடச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கரவெட்டியில் கைக்குண்டு மீட்கப்பட்டது!

வடமராட்சி, ஏப். 22

கரவெட்டி வடக்கில் காணி ஒன்றிலிருந்து கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

கரவெட்டி பிரதேச மருத்துவமனை முன்பாக உள்ள காணி ஒன்றிலேயே நேற்று முன்தினம் இந்தக் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

காணியை உரிமையாளர் துப்பரவு செய்தபோது கைக்குண்டு அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து கைக்குண்டை பொலிஸார் மீட்டுச் சென்றனர். (ஐ - 02)

# மலையகத்தவர் பிரச்னை தீர்வுக்கு இலக்கு நிர்ணயித்த நடவடிக்கை!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



கொழும்பு, ஏப். 22

பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்னைகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சில சவால்களை உரியவாறு கையாள்வதற்கு இலக்கு நிர்ணயித்த நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக் குழுமத்தின் 2024ஆம் ஆண்டுக்கான கோடைகால கூட்டத்தொடரில் பங்கேற்றபோதே தான் இந்த விடயத்தைத் தெரிவித்தார் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான தொழிற்பயிற்சி நிலையங்களை விஸ்தரிப்பதற்கான உதவி, சிறுவர்களின் போசணை, கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு ஏதுவான ஆரம்ப சிறுவர் பராமரிப்பு செயல் திட்டத்தைக் கட்டியெழுப்புதல், பெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்கக்கூடிய இலக்கிடப்பட்ட நிதி உதவித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் என்பன பற்றி ஆராயப்பட்டதாகவும் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கடற்படை அதிகாரிகள் விளக்க மறியலில்!

கொழும்பு, ஏப். 22

ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கை கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட நால்வரை விளக்கமறியலில் வைக்க புதுக்கடை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்களை ஏப்ரல் 26 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லேரியாவ பொலிஸ் உத்தியோகத்தர்களால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் குறித்த நான்கு நபர்களிடமும் இருந்து 510 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

# குற்றச்செயல்களைத் தடுக்க புதிய பாதுகாப்புத் திட்டம்!

## பொலிஸ்மா அதிபர் அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஏப். 22

**மேல் மாகாணத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக மே மாதம் முதலாம் திகதி முதல் புதிய பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**



இந்த வேலைத்திட்டத்துக்காக விசேட பொலிஸ் குழுக்களுக்கு ஏற்கனவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 வருடங்களில் மேல் மாகாணத்தில் 25 பொலிஸ் அதிகார எல்லைகளில் குற்றச்செயல்கள் துரித கதியில் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றில் கடந்த ஆண்டில் 846 தங்க நகைக் கொள்ளைகள், 12 ஆயிரத்து 125 வீடுகள் உடைப்பு மற்றும் 1,748 வாகனத் திருட்டுக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது நாடு முழுவதும் நடந்த குற்றங்களில் 32 வீதமாகும்.

இதன்படி 60 வீதமான பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்துமாறு நாடளாவிய ரீதியில் பொலிஸ் பிரிவுகளின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மேல் மாகாணத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் ரி - 56 ரக துப்பாக்கிகள் வழங்கி அந்தந்த பகுதிகள் கண்காணிக்கப்படவுள்ளன.

அத்துடன், பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள 20 பொலிஸ் குழுக்களுக்கு மேலதிகமாக, பொலிஸ்மா அதிபர் எதிர்காலத்தில் 10 பொலிஸ் குழுக்களையும் கடமையில் ஈடுபடுத்தவுள்ளார்.

அந்த 10 குழுக்களுக்கு சுமார் 360 குற்றக்கும்பலைச் சேர்ந்தவர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டு அவர்களைக் கைது செய்ய அறிவுறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுடன் 100 பேர் கொண்ட மற்றுமொரு பொலிஸ் குழுவும் விசேட பயிற்சிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்காக விசேட சீருடை, மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துப்பாக்கிகளும் வழங்கப்படவுள்ளன.

குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கைது செய்வதே அவர்களின் இலக்காகும்.

கொழும்பில் பொலிஸாரால் கண்காணிக்கப்படும் 176 சி. சி. ரிவி கமராக்களின் எண்ணிக்கையை 2000 ஆக அதிகரிக்கவும் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி தனியார் வீடுகளிலுள்ள சி. சி. ரிவியும் அவர்களின் விருப்பப்படி பொலிஸாரால் கண்காணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஏ)

# பாதாள உலக குழுவை சேர்ந்த உறுப்பினர்கள் 6 பேர் சிக்கினர்

## அவர்களுக்கு உதவிய 6 பேரும் கைது

கொழும்பு, ஏப். 22

பாதாள உலகச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாக சந்தேகிக்கப்படும் 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் பேலியகொடை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் அதுருகிரிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அதுருகிரிய பகுதிச் சேர்ந்த 40 மற்றும் 26 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மோதரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 36 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மொரட்டுவை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மொரட்டுவை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் பலபிட்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பலபிட்டிய பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 495 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

(ஏ)

# கப்பல் மார்க்கமாக வருவோருக்கு 4 நாட்கள் ஒன்லைன் வீசா முறைமை

கொழும்பு, ஏப். 22

கப்பல் மார்க்கமாக இலங்கை வரும் பயணிகளுக்கு புதிய ஒன்லைன் வீசா முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்கள மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம் நிமால் குணவர்தன தெரிவித்தார்.

நான்கு நாட்களுக்கு இந்த ஒன்லைன் வீசா முறை அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக அவர் கூறினார்.

(ஏ)

# "ஐ. ம. ச. - தே. ம. ச. யோசனைகளை ஆராய்ந்த பின்பே இறுதித் தீர்மானம்"

கொழும்பு, ஏப். 22

ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் சமர்ப்பித்துள்ள உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை யோசனைகளை கத்தோலிக்க திருச்சபை ஆராய்ந்த பின்னரே அதனை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியும்.- இவ்வாறு அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் தங்கள் யோசனைகளை அண்மையில் சமர்ப்பித்திருந்தன. அவர்களின் யோசனைகளை நாங்கள் ஆராய்ந்த பின்னரே அதனை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியும்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் இரண்டு கட்சியினரும் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர் என்பது உண்மை. ஆனால் அதன் அர்த்தம் நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டு விட்டோம் என்பதில்லை என சிறில் காமினி குறிப்பிட்டார்.

கர்தினால் சில அரசியல்கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு கிடைப்பதை உறுதி செய்ய முயல்கின்றாரா? என சந்தேகம் எழுந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார விமர்சித்துள்ளார். இது தொடர்பில் சிறில் காமினியிடம் வினவப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றவேளை இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்தவர் ரங்கே பண்டார. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரும் பல மாதங்கள் அந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தது. இதன் காரணமாக அவர்களுக்கு உரிய விசாரணையை முன்னெடுப்பதற்கு போதிய காலமிருந்தது எனத் தெரிவித்த அருட்தந்தை, ஏனைய கட்சிகளும் தங்கள் யோசனைகளை முன்வைக்கலாம் எனவும் கூறினார்.

(ஏ)

# மன்னாருக்கு ஸ்மார்ட் எதிர்காலம் இரண்டு நாட்கள் நடமாடும் சேவை

மன்னார், ஏப். 22

ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் மன்னாருக்கு ஸ்மார்ட் (SMART) எதிர்காலம் நடமாடும் சேவை நேற்று முன்தினம் மன்னார் நகர சபை மைதானத்தில் ஆரம்பமாகியது.



மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் ஏற்பாட்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

குறித்த நடமாடும் சேவையில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உட்பட திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் எனப் பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த நடமாடும் சேவையில் 36 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் கலந்து கொண்டதுடன் பின்தங்கிய மாணவர்கள் மற்றும் உள்நாட்டு தொழில் முறைமையிலான வேலை வாய்ப்புக்களும் குறித்த நடமாடும் சேவையூடாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த நடமாடும் சேவை நேற்றும் இடம்பெற்றது.

மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், வெளிநாடுகளுக்குச் சென்று சட்ட ரீதியாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ள நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் குறித்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஏ)

# கட்டுமான பொருட்களுக்கு விரைவில் விலைச் சூத்திரம்

கொழும்பு, ஏப். 22

கட்டுமானப் பொருட்களுக்கான விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

கட்டுமானப் பொருட்கள் தன்னிச்சையான விலையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக் கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வந்த 2,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(ஏ)

ஈஸ்டர் தாக்குதல் :

# உணர்வெழுச்சியுடன் சீனன்குடாவில் அஞ்சலி



சீனக்குடா, ஏப். 22

**ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு திருகோணமலை சீனன்குடா புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.**

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு நேற்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்தன. இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருகோணமலை மறைமாவட்ட சீனக்குடா புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து காலை 9 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வை நடத்தினர்.

திருப்பலி ஒப்புக் கொடுத்து ஜெபத்தினையும் ஆராதனையும் செய்துவிட்டு ஆலயத்திலிருந்து வீதிக்கு வந்து வீதியில் மெழுகுவர்த்தி ஏற்றி நினைவஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (எ)

# கட்டாக்காலி மாடுகள் தொல்லை அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்



ஏறாவூர், ஏப். 22

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் வாகனச் சாரதிகளும் பாதசாரிகளும் பலவிதமான பிரச்னைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இதனால் ஆபத்தான பல சம்பவங்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுள்ளன.

கல்முனை பொதுச் சந்தையில் மரக்கறி வாங்கிச் செல்வோரின் மரக்கறிகளுக்கும், வாழைப்பழ கடைகளுக்கும் பெரும் சேதத்தை கட்டாக்காலி மாடுகள் விளைவிக்கின்றன.

வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு முன்னால் இவை திடீரென பாய்வதால் விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்ததுடன், படுகாயமடைந்து உடல் அங்கங்களை இழந்தும் உள்ளனர்.

கல்முனை மாநகர சபையாலும் ஏனைய பிரதேச சபைகளினாலும் இது தொடர்பில் பலமுறை அறிவுறுத்தியும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொடர்ந்து இப்பிரச்னை நீடித்து வருகிறது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி உயிரிழப்புக்களை தடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)





# பக்தி பரவசத்துடன் பாற்குட பவனி

நிந்தவூர், ஏப்.22

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி சிறீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் பாற்குட பவனி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்துக்கு மேற்குப் புறமாகவுள்ள சிவன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று பாற்குடபவனி ஆரம்பமானது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் கி. ஜெயசிறில் பிரதான கும்பம் தாங்க பாற்குடபவனி சிறப்பாக நடைபெற்றது.

# உற்பத்திகளை அதிகரிப்பது குறித்து ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராய்வு

காரைதீவு, ஏப். 22

காரைதீவு பிரதேச செயலக பிரிவின் 2024 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்று கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பிலும், விவசாயிகள் மற்றும் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கமைய நீரியல் உயிரின வளர்ப்பு பிரச்னைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.



மேலும் இப்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பிலும் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

# ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா

ஆரையம்பதி, ஏப். 22

மட்டக்களப்பு - ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக இந்தப் பட்டத் திருவிழா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

இந்த பட்டத் திருவிழாவில் 30 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

இதில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் ரவீந்திரன் சோபிதன் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை, இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ)





# “ஜனநாயகம் ஒருபோதும் தோல்வியடையாது”

## உக்ரைனுக்கு அள்ளிக்கொடுத்த அமெரிக்கா!

வாஷிங்டன், ஏப். 22

உக்ரைனுக்கு 61 பில்லியன் டொலர் கடனுதவி வழங்க அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை அனுமதி வழங்கியுள்ளது.

குடியரசுக் கட்சியின் எதிர்ப்பு காரணமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் இந்த முன்மொழிவு பல மாதங்களாகத் தாமதமானது.

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல்களை அடுத்து முன்வைக்கப்பட்ட வலுவான கோரிக்கையின் அடிப்படையில் குறித்த நிதியுதவிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த தீர்மானத்துக்கு உக்ரைன் ஜனாதிபதி வோல்டிமிர் செலென்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார்.

“ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் எப்போதும் உலகளாவிய முக்கியத்துவத்தை கொண்டிருக்கும், அதை பாதுகாக்க அமெ ரிக்கா உதவும் வரை ஒருபோதும் தோல்வியடையாது.”

இந்த உதவியானது போர் விரிவடைவதைத் தடுப்பதுடன் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றும்” என உக்ரைன் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (எ)




# இஸ்ரேல் விமானத் தாக்குதல் காஸாவில் 6 குழந்தைகள் பலி

காஸா, ஏப், 22

காஸாவின் தென் பகுதி நகரான ராஃபா மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதில் 6 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

பலஸ்தீனத்துக்கு எதிராக தனது தாக்குதலை கடந்த ஏழாண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது இஸ்ரேல். ஹமாஸ் - இஸ்ரேல் இடையிலான போரால் மத்திய கிழக்குப் பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில் ராஃபாவின் புறநகர்ப் பகுதியில் தெல் சுல்தான் பகுதியில் குடியிருப்புக் கட்டடத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டதாக காஸா மக்கள் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் விமான குண்டு வீச்சுத் தாக்குதலில் உயிரிழந்த 6 குழந்தைகள், இரு பெண்கள், ஓர் ஆண் ஆகியோரின் உடல்கள், ராஃபாவின் அபு யூசுப் அல்நஜார் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ)

# நவீன ஏவுகணை பாகங்கள் பாகிஸ்தானுக்கு விற்பனை

## 4 நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை

வாஷிங்டன், ஏப். 22

நவீன ஏவுகணைகளில் பயன்படக்கூடிய பாகங்களைப் பாகிஸ்தானுக்கு விற்பனை செய்வதற்காக சீனாவைச் சேர்ந்த 3 நிறுவனங்கள் மீதும் பெலாரஸைச் சேர்ந்த ஒரு நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சீனாவைச் சேர்ந்த மூன்று நிறுவனங்கள் மீதும் பெலாரஸைச் சேர்ந்த மின்ஸ்க் வீல் ட்ராக்டர் என்ற நிறுவனம் மீதும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுகின்றன.

ஏவுகணைகளில் பயன்படக்கூடிய, ஆயுதப் பரவலை ஊக்குவிக்கக்கூடிய, பேரழிவு ஆயுதங்களை உருவாக்குவதற்குப் பயன்படக்கூடிய பாகங்களைப் பாகிஸ்தானுக்கு அளித்தமைக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஆயுதப் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ)

# நைஜரிலிருந்து படைக்குறைப்பு

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 22

அடுத்த மாதம் முதற்கட்டமாக 1,000 இராணுவத்தினர் நைஜரிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

நைஜரில் ஜனாதிபதி முகமது பாசும் தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்த்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அங்கு பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக பிரான்ஸ் மற்றும் அமெரிக்கப் படைகள் முகாமிட்டுள்ளன.

இராணுவம் ஆட்சிக்கு வந்த பிறகு பிரான்ஸ் படைகளை வெளியேறுமாறு இராணுவ ஆட்சிக்குழு தலைவர் அலி மஹாமன் லாமைன் சைனி உத்தரவிட்டார். இதன்படி பிரான்ஸ் படைகள் நைஜரிலிருந்து வெளியேறின.

இந்த நிலையில் நைஜரில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகளும் வெளியேற வேண்டும் என அங்குள்ள பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்திடம் நைஜர் இராணுவம் பேச்சுக்கள் நடத்தியது. இதற்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி முதற்கட்டமாக அடுத்த ஒரு மாதத்தில் 1,000 இராணுவத்தினர் நைஜரிலிருந்து வெளியேற்றப்படுவதாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ)

# விருந்து நிகழ்வில் துப்பாக்கிச் சூடு!

## அலறியடித்து ஓடிய மக்கள்

டென்னசி, ஏப். 22

அமெரிக்காவின் டென்னசி மாகாணம் , மெம்பிஸிலுள்ள பொழுதுபோக்கு திடலில் விருந்து நிகழ்ச்சி நடந்தது. இதில் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர். அப்போது அங்கு திடீரென்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதனால் விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். துப்பாக்கிச்சூட்டில் பலர் குண்டு பாய்ந்து கீழே விழுந்தனர். சம்பவ இடத்துக்கு பொலிஸார் மற்றும் மருத்துவ குழுவினர் விரைந்து வந்தனர். இந்தத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்தனர்.16 பேர் காயமடைந்தனர். அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ)

# பயங்கரவாதிகளின் முகாம்மீது தாக்குதல்

## 192 பேர் பலி! 340 கைது

அபுஜா, ஏப். 22

பயங்கரவாதிகளின் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 192 பேர் கொல்லப் பட்டனர் என்றும் 340 பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பிடித்து வைத்திருந்த மக்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் சமீப காலமாக பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. பயங்கரவாதிகள் அப்பாவி பொது மக்களைப் பணயக் கைதிகளாகக் கடத்திச் சென்று மிரட்டல் விடுத்து வருகின்றனர். எனவே, பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் நைஜீரியாவின் வடகிழக்கு பிராந்தியத்தில் பயங்கரவாதிகள் முகாமிட்டு சதித்திட்டம் தீட்டுவதாக புலனாய்வுத் துறைக்குத் தகவல் கிடைத்தது.

இதன்பேரில் அங்கு விரைந்த இராணுவத்தினர் அவர்களது முகாமை குறிவைத்து தாக்குதல் நடத்தினர்.

இதில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 192 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் 340 பயங்கரவாதிகளை இராணுவத்தினர் கைது செய்தனர். இதனையடுத்து அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த 62 பணயக் கைதிகளையும் இராணுவத்தினர் மீட்டனர். (எ)

# இந்தியாவுக்கான பயணத்தை ஒத்திவைத்தார் எலான் மஸ்க்



வாஷிங்டன், ஏப். 22

அமெரிக்காவின் பிரபல மின்சார கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லாவின் தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க், பணி தொடர்பான காரணங்களால் தனது இந்தியப் பயணத்தை ஒத்திவைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தொழிலதிபர் எலான் மஸ்க் இம்மாதம் 21, 22 ஆம் ஆகிய திகதிகளில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக இந்த மாதத் தொடக்கத்தில் அறிவித்திருந்தார். இந்தப் பயணத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அவர் சந்திக்கவுள்ளதாகத் தகவல் வெளியானது.

இந்தச் சந்திப்பில் மின்சார வாகனத் தயாரிப்பு தொடர்பாக பிரதமர் மோடியுடன் எலான் மஸ்க் ஆலோசனை மேற்கொள்வார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், டெஸ்லா நிறுவன பணி காரணங்களுக்காகத் தனது இந்தியப் பயணத்தை ஒத்திவைப்பதாக எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

இது குறித்து எலான் மஸ்க் ‘எக்ஸ்’ சமூகவலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘துரதிஷ்டவசமாக டெஸ்லா நிறுவனத்தின் மிக அதிக பணிச் சுமையால் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. நிகழாண்டு இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்’ எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# நிறைவேற்று அதிகார முறை ஒழிப்பை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுக!

## கட்சிகளை கோருகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, ஏப். 22

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகளின் நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறவேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் மீண்டும் கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நீண்டகாலமாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பதவிக்கு வருவதற்கு முன்னதாக அனைத்து வேட்பாளார்களும் வாக்குறுதிகளை அளிக்கின்றபோதும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் அந்த முறையை நீக்குவது தொடர்பில் கரிசனைகளை வெளிப்படுத்துவதில்லை.

இவ்வாறான நிலையில் இந்தாண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. நாம் நாடாளவிய ரீதியில் உள்ள சமூக குழுக்களுடன் உரையாடல்களைச் செய்து வருகின்றதன் அடிப்படையில் அனைத்தின சமூகங்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களை கொண்டிருப்பது புலப்படுகின்றது.

அந்தவகையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள், மக்களின் ஆணையைப் பெறுவதற்கு முன்னதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், அதற்கான காலவரையறை உள்ளிட்ட விடயங்களை வெளியிட வேண்டும்.

இதன் மூலமாக மக்கள் ஆணை பெற்று வருபவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாம் சிவில் அமைப்பாக இருப்பதன் காரணமாக, அவ்விதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றபோது, அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம் - என்றார். (ஐ)

# 40,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நீடிக்கிறது

## இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஏப். 22

நாட்டில் சுமார் 40 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைக் கூறியுள்ளார்.

குறிப்பாக மேல், கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்றும் அவர் கூறினார். (ஐ)

# காலி விபத்தில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 22

கொள்கலன் வாகனமும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மூவர் உயிரிழந்தனர்.

காலி - எல்பிட்டியில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஸ்தலத்தில் ஒருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இருவருமாக மூவர் உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த மேலும் மூவர் எல்பிட்டி ஆதார மருத்துவமனையிலும் கராப்பிட்ட போதனா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் 10, 7 வயது சிறுவர்களும் அடங்குவர். (ஐ)

# நீதிமன்றம் செல்வதா? 29இன் பின்னரே முடிவு

## சிறீலங்கா சுதந்திர கட்சி

கொழும்பு, ஏப். 22

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழு தொடர்பில் நீதிமன்றத்துக்கு செல்வதா என்று எதிர்வரும் 29ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் முடிவின் பின்னரே தீர்மானிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் பேராசிரியர் ரோஹண பியதாச தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சரதீ துஷ்மந்த மித்திரபால தேர்தல்கள் ஆணைக் குழுவில் எமது தரப்பின் நிர்வாக அங்கத்தவர்கள் உள்ளிட்ட பதவி நிலைகளை அறிவித்துள்ளார்.

இதேநேரம், சந்திரிகா தலைமையில் சட்டவிரோதமாக கூடிய தரப்பினரும் தமது சட்டவிரோதமான தெரிவுகளை தேர்தல்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தேர்தல்கள் திணைக்களம் எதிர்வரும் 29ஆம் திகதி உரிய பதிலை வழங்கவுள்ளது. இதனடிப்படையில்தான் நாம் அடுத்தகட்டம் தொடர்பில் தீர்மானிப்போம். தேர்தல்கள் திணைக்களத்தால் தீர்வை வழங்க முடியாதுவிட்டாலோ, அல்லது நீதிமன்றத்துக்கு பரிந்துரைத்தாலோ அதனை பின்பற்றுவதாகவே தற்போதைய தீர்மானம் உள்ளது - என்றார். (ஐ)



2019 ஏப்ரல் 21 (உயிர்த்த ஞாயிறு) தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 5ஆவது ஆண்டு நினைவுதினத்தையொட்டி நேற்றுமுன்தினம் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்திலிருந்து நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம் வரை நடத்தப்பட்ட ஊர்வலத்தின்போது...

# ஆற்றில் மூழ்கி யுவதி மரணம்!

கண்டி, ஏப். 22

மகாவலி ஆற்றில் நீராடிய இளம் யுவதி நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கண்டி பல்லேகலை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது யுவதியே இவ்வாறு உயிரிழந்தார். உயர்தர பிரிவில் கல்வி கற்று வரும் அவர் கண்டி - கன்னொருவ பிரதேசத்திலுள்ள உறவினரின் வீட்டுக்கு சென்றிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆற்றில் மூழ்கிய யுவதியை உறவினர்கள் மீட்டு பேராதனை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் அங்கே உயிரழந்தார். (ஐ)

## தமிழர், சிங்களவரைவிட:

# வேடுவருக்கு இந்திய பழங்குடியுடன் மிகநெருக்கமான மரபணு தொடர்பு

கொழும்பு, ஏப். 22

தமிழ், சிங்கள மக்களை விடவும் வேடுவ இன மக்கள் இந்தியாவின் 5 பழங்குடி இன மக்களுடன் நெருங்கிய மரபணுவை கொண்டுள்ளனர் என்று சமீபத்தைய ஆய்வில் தெரிய வந்துள்ளது.



இந்த வேடுவ இன மக்கள் இந்தியாவின் ஒடிசாவில் உள்ள சந்தால் மற்றும் ஜூவாங் பழங்குடியினருடனும், நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளனர்.

அத்துடன், கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இருளர், பணியா மற்றும் பள்ளர் போன்ற திராவிட மொழி பேசும் பழங்குடியினருடனும் இலங்கையின் வேடுவர்கள் வலுவான மரபணு ஒற்றுமையைப் பகிர்ந்து கொள்வதாக இந்திய மற்றும் இலங்கை ஆய்வாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.

மைட்டோகாண்ட்ரியன் என்ற அறிவியல் சஞ்சிகையில் இந்த வாரம் வெளியிடப்பட்ட அவர்களின் ஆய்வு கட்டுரையில் இலங்கையின் சிங்கள அல்லது தமிழ் மக்களை விடவும், இந்த ஐந்து பழங்குடியினருடன் வேடுவ இனத்தவருக்கு அதிக மரபணு ஒற்றுமை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஈரான் - இஸ்ரேல் பதற்றம்:

# பாதையை மாற்றுகின்றது சிறீ லங்கன் விமான சேவை!

SriLankan Airlines

கொழும்பு, ஏப். 22

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நிலவும் போர் பதற்றத்தால் முன்னெச்சரிக்கையாக சிறீ லங்கன் விமான சேவை தமது விமானப் பயண பாதைகளை மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, ஐரோப்பிய நாடுகளுக்கான விமான நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன. அத்துடன், லண்டன் செல்லும் பயணிகள் குறித்த நேரத்துக்கு முன்னதாக விமான நிலையத்தை வந்தடையுமாறு சிறீ லங்கன் விமான சேவை கோரியுள்ளது.

இதற்கமைய, விமான பயணம் ஒரு மணிநேரத்துக்கு முன்னதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. பயணப் பாதை மாற்றப்படுவதால் ஏற்படும் தாமதங்களால் பயணிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் சிறீ லங்கன் விமான சேவை நிறுவனம் மேற்கொண்டுள்ளது என்று அந்த நிறுவனம் அறிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# நாட்டை வலுப்படுத்துவதில் யாரையும் விட்டுவிட மாட்டோம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களையும் வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தில் அரசாங்கம் யாரையும் கடந்து செல்லவோ விட்டுவிடவோ போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டு மக்கள் அனைவரும் பாகு பாடின்றி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, நாட்டின் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தின் நன்மைகள் அனைவருக்கும் பகிரப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

குறைந்த வருமானம் பெறும் குடும் பங்களுக்கான அரிசி நிவாரணம் வழங் கும் 2024 தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று வெலிமடையில் நடைபெற்றது. இதில், கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அந்த முடிவுகள் மக்கள் விரும்பாத முடிவுகள் என்றே சொல்ல வேண்டும்.

முன்னர் இந்த நாட்டின் அரசாங் கங்கள் ஒரு கட்சிக்கு உரிதானதாகவே இருந்தன. இது தவிர, இரண்டு அல்லது மூன்று கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக் கும். ஆனால், இந்த அரசு அப்படியான தல்ல. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் மட்டுமே இருந்தேன். ஆனால், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என அனைவரும் அரசாங்கத்துடன் இணைந்தனர். இந்த அரசாங்கம் நாட்டின் தேவைக்காகவே உருவாக்கப்பட்டது. இந்த அரசாங் கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என சிலர் கூறினர்.

எப்படியிருந்தாலும், நாட்டு நலனுக் கான நோக்கங்களை வெற்றிகரமாக செயல்படுத்தினோம். அதற்காக பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு நன்றி தெரி வித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களையும் கட்டியெழுப்புவதில் யாரையும் கடந்து செல்வதற்கோ அல் லது விட்டுவிடவோ நாம் தயாரில்லை. எனவே, நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகி றது. இன்று, சுற்றுலாத்துறை மூலம் கிராமங்களுக்கு பணம் கிடைக்கிறது.

மேலும், விவசாயத்தை நவீனமயமாக் கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டுள் ளது. வலுவான ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று சொல்ல வேண்டும் - என்றார். (ஐ)

### சுதந்திர...

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சி யின் செயற்குழு கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை காரணமாக முன்னாள் ஜனாதிபதி சிறிசேன கட்சித் தலைவராக செயல்படு வது தடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸ தெரிவு செய்யப்பட்டார் என்று துமிந்த மித்தி பால கூறியுள்ளார். விஜேதாஸ ராஜபக்ஷ ஏகமனதாக பதில் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### உணர்வெழுச்சி...

அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதான நிகழ்வு கொழும்பு கொச்சிக் கடை புனித அந்தோனியார் தேவாலயத் தில் பேராயர் மல்கம் ரஞ்சித் தலைமை யில் நடைபெற்றது.

குண்டுவெடிப்பு நடந்த நேரமான காலை 8.40 மணிக்கு விசேட ஆராதனை கள் ஆரம்பமாகின. காலை 8.45 மணிக்கு நாடு முழுவதும் 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேநேரம், உயிர்த்த ஞாயிறு தினத் தில் கொல்லப்பட்டோர் நினைவாக நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் விசேட ஆராதனைகள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதலின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் விசேட ஆராதனை நடைபெற்றது.

இந்த ஆராதனையின் பின்னர் அருட்தந்தையர்கள், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பி னர்கள் மற்றும் கத்தோலிக்க சமூகத்தி னர் பங்கேற்ற பேரணி கடுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தை நோக்கி சென்றனர்.

இந்தப் பேரணி நேற்று காலை 7.30 மணியளவில் புனித செபஸ்தியார் தேவாலயத்தை சென்றடைந்தது.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தில் 3 தேவாலயங்கள் உட்பட 8 இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடத் தப்பட்டன. இதில், 253 பேர் கொல்லப் பட்டனர். 500இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் மற்றும் காயங்களுக்கு உள்ளா கினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென் மாகாண ஆளுநர் வில்லி பதவி விலகல்!

கொழும்பு, ஏப். 22

தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதி பதியின் செயலாளரிடம் கையளித்துள் ளார்.

மே மாதம் 02 ஆம் திகதி முதல் நடை முறையாகும் வகையில் தனது பதவி விலகல் கடிதத்தை அவர் கையளித்துள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(எ)

### 1,700...

நேற்று போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தப் போராட்டங்களில் பல நூறு பேர் பங்கேற்றனர். இந்தப் போராட்டத் தின்போது, குறித்த நகரங்களில் வர்த்த கர்கள் கடைகளை மூடி கறுப்புக் கொடி கட்டி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. (ஐ)

### மட்டு...

தே.வாலயத்தின் போதகர் மகேசன் ரொசான் தலைமையில் விசேட ஆராத னையில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனையும் நடை பெற்றது.

இதேவேளை, குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட தேவாலயம் இதுவரை புனரமைக்கப்படாமல் மூடப்பட்ட நிலையில் உள்ளது. உயிரிழந்தவர்களின் உறவுகள் தேவாலயத்தின் நுழைவாயி லில் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும் இடம்பெற்றது. இந் தத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்தனர். 80இற்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதாள உலகக் குழுக்களில் இராணுவத்தினர் இணைவு

கொழும்பு, ஏப். 22

மேல், தென் மாகாணங்களில் நடத் தப்பட்ட பாதாள உலகக் குழுவின் தாக்குதல்களில் துப்பாக்கிதாரிகள், மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களாக பணிக்கு திரும்பாத இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஐந்து வருடத்தில் சுமார் 25 ஆயிரம் பேர் இராணுவத்துக்கு திரும்ப வில்லை. இவர்கள் விடுமுறை எதுவும் பெறாமல் பணியிலிருந்து விலகி உள்ளனர்.

எவ்வாறாயினும், இராணுவ அதிகாரி கள் மற்றும் சிப்பாய்கள் பாதாள உலகக் குழுவில் இணைதல் தொடர்பில் இராணுவத்தின் அனைத்து அதிகாரி களுக்கும் விழிப்புணர்வூட்டும் செயல் கள் இராணுவ பொலிஸார் மூலம் மேற் கொள்ளப்படுகின்றது.

இது தொடர்பில், 41 ஆயிரத்து 700இற்கும் மேற்பட்ட இராணுவத்தின ருக்கு இது குறித்து இராணுவ பொலிஸ ார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, இராணுவத்திலிருந்து தாமாக விலகியவர்களுக்காக எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதி வரை பொது மன்னிப்பு காலமாக நீடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மைத்திரிபால சிறிசேனவுக்கு தண்டனை வழங்க வேண்டும்

## சரத் பொன்சேகா திட்டவட்டம்

தலஹேன, ஏப். 22

குண்டுத் தாக்குதல் குறித்து தகவல் கிடைத்தும் தடுக்க நடவடிக்கை எடுக் காத மைத்திரிபால சிறிசேனவுக்கு தண் டனை வழங்கப்பட வேண்டும். - இவ் வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனக்கு வாய்ப்பு கிடைத்தால் ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவரை நிச்சயம் பிடிப்பேன் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப் பிட்டுள்ளார்.

தலஹேனவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :



ஈஸ்டர் தாக்குதல் நடந்து ஐந்து வரு டங்கள் கடந்துள்ள நிலையில், அந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட் டவர்கள் இன்னமும் தலைமறைவாக உள்ளனர்.

புலனாய்வுத் தகவல்களின் பிரகாரம் தாக்குதல் நடத்தப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம் போன்றவற்றை அரச புல னாய்வு அதிகாரிகள் அறிவித்திருந் தும் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக் காத முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேனவுக்கு தண்டனை வழங் கப்பட வேண்டுமெனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார். (எ)

### பாதையை...

பந்தயம் நேற்று பதுளை - தியத்த லாவையில் நடைபெற்றது. பந்தயத்தை பார்க்க சுமார் ஒரு இலட்சம் பார்வையா ளர்கள் வரை கூடியிருந்தனர்.

பந்தயத்தில் கார்கள் கடுகதி வேகத் தில் ஓடிக்கொண்டிருந்தபோது 71ஆம் இலக்கக் கார் கவிழ்ந்தது. பந்தய அதி காரிகள் மஞ்சள் கொடி எச்சரிக்கையை வெளிப்படுத்தினர். இந்த சமயத்தில் மற்றொரு கார் பந்தய பாதையை விட்டு விலகி பார்வையாளர்கள் பகுதிக்குள் புகுந்து அவர்களை மோதித் தள்ளியது.

5 அல்லது 196 என்ற எண் கொண்ட கார்களே பாதையை விட்டு விலகி பார்வையாளர்களை மோதின என்று கூறப்படுகின்றது. எனினும், இதில் குழப்பம் நிலவுகிறது. எனினும், இது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், பார்வையாளர் கூட்டத்துக்குள் புகுந்த காரால் சம்பவ இடத்திலேயே ஐவர் உயிரிழந்தனர். இவர்களில் 8 வயது சிறுமியும் அடங்குவார். மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் இருவர் உயிரிழந்தனர். 24 பேர் படுகாயமடைந் துள்ளனர். படுகாயமடைந்தவர்களிலும் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று இராணுவ பேச்சாளர் ரவி ஹேரத் தெரிவித்தார்.

விபத்தில் சிக்கிய கார்களின் சாரதி களின் நிலைமை தொடர்பில் எந்த உத்தி யோகபூர்வ அறிவித்தலும் வெளியாக வில்லை. அவர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படு கின்றது.

இந்த விபத்து தென்னிலங்கையில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கார் பந்தயம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள் ளது. (ஐ)

### உயிர்த்த...

இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் களில் கொல்லப்பட்டோரின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நடை பெற்றது. கொழும்பு - கொச்சிக்கடை புனித அந் தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்விலேயே ஐ. நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரே பிரான்சே கலந்து கொண் டார்.

அவர் தனது உரையில்,

“2019 உயிர்த்த ஞாயிறு படு கொலைகளுக்கு யார் காரணம் என்பதை கண்டுபிடிப்பதற்கு முழுமையான வெளிப்படையான விசாரணைகள் அவசியம். இலங்கை தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றது. அது பொறுப் புக்கூறலுக்கான (2009 இறுதிப் போர் தொடர்பான) பொறுப்புக்கூறலாக இருக்கலாம் அல்லது சமீபத்தைய மனித உரிமைகள் மீறலுக்கான பொறுப்புக் கூறலாக இருக்கலாம். நாடு முன்னோக்கி நகர வேண்டுமென்றால் இதற்குத் தீர்வு காண வேண்டும்.

உயர்நீதிமன்றம் தாக்குதலை தடுக்கத் தவறினார்கள் என்று முன்னாள் ஜனாதி பதி மற்றும் உயர் அதிகாரிகளுக்கு எதி ராகக் குற்றச்சாட்டுகளை சுமத்தி யுள்ளது. இருந்தபோதிலும், பாதிக்கப் பட்டவர்கள் நீதிக்காக இன்னமும் காத்திருக்கின்றனர். சவால்களுக்குத் தீர்வை காண்பதற்கான முயற்சிகளின் ஒருபகுதியாக உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி காணப்படுதல் அவசியம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ரணில்தான் ஜனாதிபதி மக்கள் முடிவு மாறாது

### என்கிறார் பிரசன்ன ரணதுங்க

களனி, ஏப். 22

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக மக்கள் ஏற்கனவே தெரிவு செய்துவிட்டனர் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அரசியல்வாதிகளால் விநியோகிக்கப்படும் பொருட்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

நேற்று களனியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர், தேர்தலை இலக்கு வைத்து அரிசி விநியோகம் செய்யவில்லை என்றும், பல்வேறு அரசியல் சித்தாந்தங்களைக் கொண்டவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைவதாகவும் தெரிவித்தார்.

"நாங்கள் தேர்தலை இலக்கு வைத்து இதை செய்யவில்லை. பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டாலும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க அவரால் தான் முடியும் என்பதால் மக்கள் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவை தேர்ந்தெடுத்து விட்டனர்" - என்றார்

# வேலுகுமார் எம். பி.மீது திடீர் தாக்குதல் முயற்சி

### புசல்லாவையில் பதற்றம்



கண்டி, ஏப். 22

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்மீது திடீர் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் எஸ். செல்லமுத்துவின் ஆதரவாளர்களே இந்தச் செயலில் ஈடுபட்டனர் என வேலுகுமார் எம்.பியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புசல்லாவை, அருள்மிகு சிறீ மகா கணபதி ஆலயத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்றுவிட்டு, அடுத்த நிகழ்வுக்காக வேலுகுமார் எம்.பி. சென்றிருந்த வேளையே, புசல்லாவை நகரில் வைத்து தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# "அரசே கொலையாளிகளை மறைக்காதே!" நீதிகோரி நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

ஏறாவூர், ஏப். 22

**மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலோடு தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கைதுசெய்யக் கோரி பொதுமக்கள் மற்றும் சமூகச் செயல்பாட்டாளர்கள் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்த குண்டுத் தாக்குதல் இடம்பெற்று 5 வருட நினைவுதினத்தை முன்னிட்டு சூத்திரதாரிகளைக் கைதுசெய்யக் கோரி சமூகச் செயல்பாட்டாளர்கள் போராட்டத்து அழைப்பு விடுத்ததையடுத்து மத குருமார்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூகச் செயல்பாட்டாளர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்றுதிரண்டனர்.

"அரசே கொலையாளிகளை மறைக்காதே", "குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகளைக் கைது செய்", "சர்வதேசமே மௌனத்தை கலைத்து ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை தா", "வேண்டும் வேண்டும் நீதி வேண் டும்", "ஐ.நாவில் வழங்கிய வாக்கு மூலம் என்னாச்சு", "5 ஆண்டு கடந் தும் அவலத்துக்கு நீதி இல்லையா?" போன்ற சுலோகங்கள் ஏந்தியும், கோஷம் எழுப்பியும் சுமார் ஒரு மணித்தியாலம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய தூதுவர்

ஜெருசலேம், ஏப். 22

இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களில் சுமார் 70 வீதமானோர் வீடுகளில் பாதுகாப்பாக பணியாற்றி வருவதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமால் பண்டார தெரிவித்தார்.

இவர்களில் சுமார் 15 வீதமானோர் விவசாயத்துறையில் பணியாற்றுவதாகவும், ஏனையோர் கட்டுமானத்துறையிலும், ஏனைய துறைகளிலும் பணியாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தில் லெபனான் எல்லைப் பகுதியினூடாக இடைக்கிடையே குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அந்த வலயத்தில் வசித்து வந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அந்த இடத்திலிருந்து தற்காலிகமாக வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதேவேளை, இலங்கையர்களுக்கு எவ்வித பிரச்னைகளும் ஏற்படாது எனவும் அவர் உறுதிப்படுத்தினார்.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் அந்நாட்டிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானித்து வருகிறது. பிரச்னைகளுக்கு எவரேனும் முகங்கொடுத் தால் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# இலங்கை நிதி நிலைமை குறித்து சர்வதேச அமைப்புகள் திருப்தி

வாஷிங்டன், ஏப். 22

கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதைப் போன்று இலங்கையின் கடன் நிலைபேறான தன்மைக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம். தற்போதைய மறுசீரமைப்புக்களால் இலங்கையின் நிதி நிலைமை ஸ்திரமடைந்துள்ளது என பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவரும் பிரான்ஸ் பல்தரப்பு விவகாரம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி கொள்கைத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் விலியம் ரூஸ் தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிடம் அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் இடம்பெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அரையாண்டு வசந்தகால மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்து கொண்டுள்ள செஹான் சேமசிங்க பாரிஸ் கிளப், ஒபெக் நிதியம், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராஜ்ஜியத்தின் முகவரமைப்பு உட்பட சர்வதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளுடன் இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் செஹான் சேமசிங்கவுக்கும், பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவரும் இடையிலான சந்திப்பின் போது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் ஏனைய தரப்பினருடனான பேச்சுக்களின் முன்னேற்றத்தன்மை குறித்து கலந்துரையாடப்பட்டது.

கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதைப் போன்று இலங்கையின் கடன் நிலைபேறான தன்மைக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம்.

தற்போதைய மறுசீரமைப்புக்களால் இலங்கையின் நிதி நிலைமை ஸ்திரமடைந்துள்ளது.ஆகவே, பொருளாதார மறுசீரமைப்புக்களை மீளாய்வு செய்யாமல் முன்னெடுப்பது அத்தியாவசியமானது என விலியம் ரூஸ் வலியுறுத்தினார்.

இதேவேளை, செஹானுடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராஜ்ஜிய முகவரான்மை பிரதி நிர்வாக அதிகாரி அஞ்சலி ஹெறிக்கும் இடையிலான சந்திப்பில் இலங்கையின் பல்துறை அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்துக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக அஞ்சலி உறுதியளித்தார்.

பொருளாதார மீட்சிக்காக இலங்கை முன்னெடுத்த தீர்மானங்கள் குறுகிய காலத்தில் வெற்றி பெற்றுள்ளதாகவும், தற்போதைய மறுசீரமைப்பு மற்றும் அதனுடனான முன்னேற்றங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பல்வேறு வழிகளில் நினைவேந்த முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 22

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15ஆவது ஆண்டு நினைவேந்தலை பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் மயப்படுத்தி முன்னெடுக்க வேண்டும் என்று சிவில் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

எதிர்வரும் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் புனித தெரேசா தேவாலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிவில்-சமூக அமைப்புகள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புகள் கலந்துரையாடின.

இந்தக் கலந்துரையாடலில், முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தலை பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் மயப்படுத்தி மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நினைவேந்தல் செயல் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்து கொண்ட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

இதுதவிர, காஸாவில் தற்போது இன்னுமொரு மனித பேரவலம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட அவலம் மீண்டும் நடைபெறாமலிருப்பதை மனதிலே கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நாங்கள் முக்கியத்துவப்படுத்த வேண்டும். இந்த நினைவேந்தல் நிகழ்வை ஓர் இடத்துடன் மட்டுப்படுத்தாமல் பரவலாக அனுஷ்டிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு நீடித்த நினைவேந்தலாக, ஓர் இன அழிப்பின் நினைவேந்தலாக எவ்வாறு மேற்கொள்ளலாம்? என்பதை கிராம மட்டப் பொது அமைப்புக்கள் தீர்மானித்து முன்னெடுக்க வேண்டும் என்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தியிருந்தனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### 267 மீண்டும் இமாலய இலக்கு -

# 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் அபார வெற்றி!

டில்லி, ஏப். 22

டில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் அணி அபார வெற்றி பெற்றது. 267 ஓட்டங்கள் வெற்றி இலக்கு என்ற நிலையில் 19.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த டில்லி அணி 200 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

டில்லியிலுள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. சன்ரைசர்ஸ் சார்பில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களம் கண்ட ட்ராவிஸ் ஹெட் - அபிஷேக் சர்மா இணைந்து பந்துகளைப் பறக்கவிட்டனர்.

16 பந்துகளிலேயே அரைச்சதம் கடந்தார் ட்ராவிஸ் ஹெட். அவரின் ஐ. பி. எல். சீசனில் அதிவேக அரைச்சதம் இது. இருவரும் இணைந்து சிக்ஸர்கள், பௌண்ட்ரிகள் என விளாசிக்கொண்டிருக்க 6 ஓவர்களுக்கு 125 ஓட்டங்களைச் சேர்த்து மலைக்க வைத்தது சன்ரைசர்ஸ். ஐ. பி. எல். தொடரில் பவர்பிளேயில் 125 ஓட்டங்கள் குவிப்பது பெரும் சாதனை.

இந்நிலையில், 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்த சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 266 ஓட்டங்கள் குவித்தது. ஷபாஸ் அகமது 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். டில்லி கப்பிட்டல்ஸ் அணி சார்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளையும், முகேஷ்குமார், அக்சர் படேல் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 267 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் இறங்கிய டில்லி அணி, ஆரம்பத்திலேயே தடுமாறியது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய பிரித்வி ஷா 16 ஓட்டங்களிலும் டேவிட் வோர்னர் ஒரு ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர்.



அடுத்து களமிறங்கிய ஜேக் பிரேசர் மற்றும் அபிஷேக் போரெல் இருவரும் சற்று நம்பிக்கையூட்டும் படியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஜேக் பிரேசர் 18 பந்துகளில் 65 ஓட்டங்களும் அபிஷேக் 22 பந்துகளில் 45 ஓட்டங்களும் எடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

தொடர்ந்து டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 10, ரிஷப் பண்ட் 44, லலித் யாதவ் 7, அக்சர் படேல் 6 ஓட்டங்கள் என அடுத்தடுத்து விக்கெட்கள் விழ 19.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த டில்லி அணி 199 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. இதனையடுத்து 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் அணி அபார வெற்றி பெற்றது. (எ)



# சொதப்பியது சென்னை லக்னோ இலகு வெற்றி

லக்னோ, ஏப். 22

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 34 ஆவது லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி. இரண்டாவது இன்னிங்ஸில் லக்னோ அணித் அணித் தலைவர் கே. எல். ராகுல் மற்றும் டிகொக் இணை சிறப்பாக துடுப்பெடுத்தாடினர்.

177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி விரட்டியது. முதல் விக்கெட்டுக்கு 134 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர் ராகுலும் டி கொக்கும். இந்நிலையில் 43 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்த டி கொக் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ராகுல் லக்னோ அணியின் வெற்றி உறுதி செய்தார்.

53 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்த ராகுல், பத்திரண வீசிய 18 ஆவது ஓவரின் முதல் பந்தில் அவர் ஆட்டமிழந்தார். ஜடேஜா அற்புதமாக பிடியெடுத்து அவரை வெளியேற்றினார். இறுதி இரண்டு ஓவர்களில் லக்னோவின் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டது. துஷார் தேஷ்பாண்டே வீசிய 19 ஆவது ஓவரில் வெற்றிக்கு தேவைப்பட்ட அந்த ஓட்டங்களை எடுத்தது லக்னோ. இதன் மூலம் 6 பந்துகள் எஞ்சியிருக்க 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

லக்னோவிலுள்ள ஏகானா மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ பந்துவீச்சை தெரிவு செய்தது. முதல் இன்னிங்ஸில் சி. எஸ். கே. அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய ரச்சின் ரவீந்திரா 2 ஆவது ஓவரிலேயே டக் அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து ருதுராஜ் கெய்க்வாட் 4 ஆவது ஓவரில் பிடி கொடுத்து 17 ஓட்டங்களில் வெளியேறினார். 6 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்த சி. எஸ். கே. 51 ஓட்டங்கள் சேர்த்தது.

ஓரளவுக்கு நம்பிக்கையுடன் விளையாடி அஜிங்க்ய ரஹானேவை 9 ஆவது ஓவரில் குருணால் பாண்டியாவிடம் விக்கெட்டை பறிகொடுத்தார். 36 ஓட்டங்களில் ரஹானே ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஷிவம் துபே 3 ஓட்டங்களிலும், சமீர் ரிஸ்வி ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க தடுமாறிய சென்னை அணி 15 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்கள் சேர்த்தது.

ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் மொயின் அலி 18 ஆவது ஓவரில் ஹட்ரிக் சிக்ஸர்களை விளாசினாலும் அதற்கு அடுத்த பந்தே 30 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது விக்கெட்டை இழந்தார். மறுபுறம் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த ஜடேஜாவுடன் 7 ஆவது விக்கெட்டுக்கு கைகோத்தார் டோனி.

அவர் விளாசிய 2 சிக்ஸர்களால் அரங்கமே உற்சாகமடைந்தது. இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த சி. எஸ். கே. 176 ஓட்டங்களைச் சேர்த்தது. ஜடேஜா 57 ஓட்டங்களுடனும் டோனி 28 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

லக்னோ அணி தரப்பில் குருணால் பாண்டியா 2 விக்கெட்டுகளையும், ரவி பிஷ்னோய், மார்க்கஸ் ஸ்டாயினிஸ், மொஹ்சின் கான், யஷ் தாக்கூர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (எ)

# சென்னையின் தோல்விக்கு என்ன காரணம்?

லக்னோ, ஏப். 22

லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் 15 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டோம். இதனால் தான் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது என சென்னை அணித்தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் தெரிவித்தார்.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் லக்னோவிலுள்ள ஏகானா மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் நடப்பு சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியிடம் தோல்வியடைந்தது. 177 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய லக்னோ அணி 6 பந்துகளை மீதம் வைத்து 19 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

லக்னோ அணித் தலைவர் கே. எல். ராகுல் 53 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்களும் குயிண்டன் டி கொக் 43 பந்துகளில் ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 54 ஓட்டங்களும் விளாசினர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 15 ஓவர்களில் 134 ஓட்டங்கள் குவித்து மிரட்டியது. சென்னை அணியின் பந்து வீச்சு எந்த ஒரு கட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தாதது இரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது.

பவர்பிளேவில் சென்னை அணி 54 ஓட்டங்களைத் தாரை வார்த்தது. துஷார் தேஷ்பாண்டே, முஸ்தபிஸூர் ரஹ்மான் ஆகியோர் ஓவருக்கு சராசரியாக 10.50 ஓட்டங்களுக்கு மேல் வழங்கினர். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மதீஷ பத்திரண 4 ஓவர்கள் வீசி 29 ஓட்டங்கள் வழங்கினார். இருப்பினும் அவரால் ஒரு விக்கெட் மட்டுமே கைப்பற்ற முடிந்தது. இது ஒருபுறம் இருக்க துடுப்பாட்டத்தில் சி. எஸ். கே. அணி நடு ஓவர்களில் தடுமாற்றம் அடைந்தது. பவர்பிளேவில் 51 ஓட்டங்கள் சேர்த்த சி. எஸ். கே. அணியால் அடுத்த 9 ஓவர்களில் மேற்கொண்டு 54 ஓட்டங்கள் தான் எடுக்க முடிந்தது.

இந்த 9 ஓவர்கள் ஓட்டக் குவிப்பில் பெரிய தேக்கத்தை ஏற்படுத்தியது. இறுதிக்கட்ட ஓவர்களில் மொயின் அலி 20 பந்துகளில் 30 ஓட்டங்களும், எம். எஸ். டோனி 9 பந்துகளில் 28 ஓட்டங்களும் விளாசியதன் காரணமாகவே சி. எஸ். கே. அணியால் 177 ஓட்டங்கள் இலக்கை கொடுக்க முடிந்தது. ஆனால், பந்து வீச்சில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்ததால் தோல்வியை சந்திக்க நேரிட்டது.

தோல்வி குறித்து சென்னை அணியின் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் கூறுகையில், துடுப்பாட்டத்தில் இறுதிப் பகுதியில் நன்றாக முடித்தோம். இதைவிட சிறப்பாக நிறைவு செய்யும்படி கேட்டிருக்க முடியாது. ஆனால், பவர்பிளே முடிந்த பிறகு 15 ஓவர் வரை பெரியளவில் நாங்கள் ஓட்டங்கள் சேர்க்கவில்லை. சீரான இடைவெளியில் விக்கெட்களை பறிகொடுத்தோம். 10 முதல் 15 ஓட்டங்கள் குறைவாக சேர்த்து விட்டோம். துடுப்பாட்டத்தில் செய்வதற்கு ஆடுகளம் சற்று கடினமாக இருந்தது. ஆட்டத்தின் பிற்பாதியில் பனிப்பொழிவு இருந்தது.

இதனால் 180 முதல் 190 ஓட்டங்கள் வரை எடுத்திருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும். பந்து வீச்சில் பவர்பிளேவில் நாங்கள் முன்னேற்றம் காண வேண்டும். பவர்பிளேவில் விக்கெட்கள் வீழ்த்தினால்தான் எதிரணிக்கு பின்னடைவை கொடுக்க முடியும். விரைவில் மீண்டும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். இதற்கு சிறந்த முறையில் தயாராவோம்.- இவ்வாறு ருதுராஜ் கெய்க்வாட் கூறினார். (எ)

# போலிச் செய்திகளால் பிரீத்தி ஜிந்தா ஆவேசம்

மும்பை, ஏப். 22

பஞ்சாப் கிங்ஸ் அணித் தலைவர் ரோஹித் சர்மாவை நியமிக்க பிரீத்தி ஜிந்தா முயற்சி செய்கிறார் என்று அடிப்படையற்ற போலி செய்திகளை, வதந்திகளைப் பரப்புகின்றனர் என்று பிரீத்தி ஜிந்தா காட்டமாக மறுத்துள்ளார்.


பஞ்சாப் கிங்ஸ் அணித் தலைவர் ஷிகர் தவான் காயமடைந்ததால் இத்தகைய செய்திகளை உருவாக்குகின்றனர். இது நல்ல விஷயமே அல்ல என்று பிரீத்தி ஜிந்தா வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஷிகர் தவான் காயமடைந்ததால் இப்போதைக்கு சில போட்டிகளில் ஆடவில்லை. ஆனால், அவர் காயமடையவில்லை. அவரை ஓரங்கட்ட பிரீத்தி ஜிந்தா முயற்சி செய்கிறார். ரோஹித் சர்மாவை பஞ்சாப் அணித் தலைவராக இழுக்க முயல்கிறார் என்ற செய்திகள் வெளிவந்தன.

இந்நிலையில் தனது எக்ஸ் தள பக்கத்தில் பிரீத்தி ஜிந்தா வெளியிட்ட பதிவில்: ""போலிச் செய்தி! இது தொடர்பாக வெளியாகும் அனைத்துச் செய்திகளுக்கும் எந்த ஆதாரமும் இல்லை. ரோஹித் சர்மா மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. நான் அவரது இரசிகை. நான் இது தொடர்பாக எந்தவொரு நேர்காணலிலோ அல்லது எந்த இடத்திலும் ரோஹித் சர்மா பற்றிப் பேசவேயில்லை.

மேலும், ஷிகர் தவான் மீதும் எனக்குப் பெரிய மரியாதை உண்டு. அவர் காயமடைந்திருக்கும்போது இப்படிப்பட்ட வதந்திகளை உருவாக்குவது நல்லது அல்ல.

இணைய ஊடகங்களில் எப்படி செய்திகள் திரிவுபடுத்தப்பட்டு போலியாக வெளியாகின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம். யாரும் இது சரியா என்பதையும் சரிபார்ப்பதில்லை. எனவே, இத்தகைய தர்மசங்கடமான



செய்திகளை வெளியிட வேண்டாம் என்று அனைத்து ஊடகங்களிடமும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதைக்கு எங்கள் அணி தரமான அணிதான். வெல்வதுதான் எங்கள் குறிக்கோள். நன்றி என்று ப்ரீத்தி ஜிந்தா பதிவிட்டுள்ளார். பஞ்சாப் கிங்ஸ் இதுவரை 7 போட்டிகளில் 4 புள்ளிகளுடன் 9 ஆம் இடத்திலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# இந்தியா என்றொரு கூட்டுக்கனவு!

ஆதி வள்ளியப்பன்



"ஒரு பரம ஏழையும் இது தன்னுடைய நாடு என உணரும் வகையில் இந்தியாவை உருவாக்க நான் விழைவேன். அப்போதுதான் அவர்களுடைய குரலும் இங்கே வலுத்து ஒலிக்கும்." - மகாத்மா காந்தி

உலகின் பாதிக்கும் மேற்பட்ட நாடுகளைப் போல் இந்தியாவும் இந்த ஆண்டில் தேர்தலைச் சந்திக்கிறது. 'அரசியல் ஒரு சாக்கடை', 'அரசியல்வாதிகள் அனைவருமே மோசமானவர்கள்' என்பன போன்ற கருத்துகளைக் கொண்டிருப்பவர்களும்கூட, தேர்தல் என்று வரும்போது தங்களுக்குப் பிடித்த ஒரு கட்சிக்கு வாக்களிக்கவே செய்கிறார்கள்.

அரசியல், கட்சிகள், ஆட்சியாளர்கள் பற்றிப் பெரிய முடிவுகளோ, தீர்மானங்களோ இல்லாத சாதாரணர்களும் வாக்களிக்கிறார்கள். நகர்ப்புறங்களில் வாழும் மேல் நடுத்தர வர்க்கத்தினரும் மேல்தட்டு வர்க்கத்தினருமே வாக்களிப்பைப் பொதுவாகத் தவிர்க்கிறார்கள்.

தங்களது பெரும்பாலான தேவைகளை ஏதோ ஒரு வகையில் அவர்கள் அடைந்துவிடுகிறார்கள். அவர்களிடையே நிலவும் அரசியல் விலக்கம் முறையான காரணங்கள் இல்லாத கற்பிதமாகவும் நிலைபெற்றிருக்கிறது. நாம் செலுத்தும் ஒவ்வொரு வாக்கும், அந்த வாக்கின் அடிப்படையில் யாரைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதும் எவ்வளவு மதிப்புடையவை என்பதை நாம் இன்னும் முழுமையாக உணர்ந்திருக்கவில்லை.

இந்தச் சமூகத்தின் ஒரு பகுதியாகவும், இந்தச் சமூகம் தொடர்ந்து இயங்குவதற்கான அடிப்படைக் கூறாகவும் சாதாரண உழைக்கும் மக்களே இருக்கிறார்கள். காலம் முழுக்க உழைத்தாலும் அடிப்படைத் தேவைகள் நிறைவேறுவதோ, நிம்மதியான ஒரு வாழ்க்கையோ அவர்களுக்குச் சாத்தியப்படுவதில்லை.

எல்லாவற்றுக்கும் முட்டிமோத வேண்டியிருக்கிறது. அவர்கள் திரும்பத் திரும்ப விளிம்புக்குத் தள்ளப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இதிலிருந்து விடிவு பெற வேண்டுமென நினைக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை, தேர்தல் அரசியல் சார்ந்த கட்சிகளே தங்களுக்கான எதிர்காலத்தை ஓரளவுக்கு உறுதிப்படுத்தும் என்கிற நம்பிக்கை உழைப்பாளிகளுக்கு இருக்கிறது.

தன் எதிர்காலத்துக்கும் தன் சந்ததிகளின் எதிர்காலத்துக்கும் குறைந்தபட்ச உத்தரவாதம் அளிக்கும் என்று நம்பப்படும் கட்சிகளுக்கே பொதுவாக வாக்குகள் இடப்படுகின்றன.

**ஈர்க்கும் புதிய வாக்காளர்கள்:**

இந்தியத் தேர்தல்களில் ஒரே கட்சி ஆதிக்கம் செலுத்திய தொடக்கக் காலத்தைத் தாண்டிப் பல்வேறு மாநிலக் கட்சிகள் தோன்றியதும் தேர்தல் அரசியலில் ஆதிக்கம் செலுத்தியதும் வரலாறு. மாநிலக் கட்சிகள் அந்தந்த மாநிலத்துக்கு உரிய வகையில் சமூக நீதி, மேம்பாடு சார்ந்த கொள்கைகளை முன்வைத்துக் களம் கண்டது, அவை பெற்ற வெற்றிக்கு முக்கியக் காரணம்.

தேர்தல் வரலாற்றில் மக்கள் மாறி மாறியும் ஒரே கட்சியையும் ஆட்சியாளர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அதற்கு அந்தந்தக் காலத்துக்குரிய நியாயங்களும் இருந்துவந்திருக்கின்றன. நமது வாக்காளர்கள் அரசியல் தெளிவு பெற்றவர்களாக (informed voters) வளர்த்தெடுக்கப்படாததும் தேர்தலில் ஏற்படும் சாய்வுகளுக்கு முக்கியக் காரணம்.

இன்றைக்கு இளம் தலைமுறையினரின் வாக்குகளை அறுவடை செய்துவிடப் பல கட்சிகள் ஆர்வமாக இருக்கின்றன. பழைய வாக்காளர்கள் ஏற்கெனவே குறிப்பிட்ட கட்சி சார்ந்த சார்புகளை, ஏதோ ஒரு வகையில் பெற்றிருப்பார்கள் எனக் கருதப்படுவதுதான் புதிய வாக்காளர்களை நோக்கி கவனம் திரும்பியிருப்பதற்குக் காரணம்.

சமூக-அரசியல் புரிதலில் தொடக்க நிலையில் இருக்கும் புதிய வாக்காளர்களை, தங்களை நோக்கி ஈர்ப்பது எளிது என நினைப்பதும், இன்னும் நெறிமுறைப்படுத்தப்படாத சமூக ஊடகப் பிரச்சாரம் அவர்களை எளிதில் சென்றடையும் எனக் கட்சிகள் கருதுவதும் மற்ற காரணங்கள்.

அதே நேரம், நாடு விடுதலை பெற்று 77 ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் நிலையில், ஒரு குடியரசாக இந்தியா எப்படி இருக்க வேண்டும் எனக் கனவு காணப்பட்டது என்பது குறித்து இன்றைய இளைஞர்கள் அறிந்திருப்பது மிக முக்கியம்.

**கூட்டுக் கனவுக்கு ஓர் உருவம்:**

இந்தியச் சமூகத்தைப் போலப் பன்முகத்தன்மை வாய்ந்த சாதியினர், மதத்தினர், மொழியினர், பண்பாட்டைக் கொண்டவர்கள் கலந்து வாழ்வது அரிது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது நம் சமூகத்தைப் பொறுத்தவரை ஏதோ அலங்கார வார்த்தையல்ல. காலங்காலமாக இந்தியா அப்படித்தான் வாழ்ந்துவந்திருக்கிறது, வாழ்ந்துகொண்டும் இருக்கிறது.

இதில் அவ்வப்போது பிணக்குகள் எழுந்திருக்கலாம். ஆனால், அந்தப் பிணக்குகளைவிட இணைந்து ஒரு சமூகமாக வாழ்ந்ததும் அது சார்ந்து பெற்ற அடையாளமுமே நிலைத்துவந்திருக்கிறது. இந்த உள்ளார்ந்த தன்மைக்கு ஒரு சட்ட வடிவம் கொடுக்கும் வகையிலேயே அரசமைப்பு நிர்ணய அவை, விரிவான விவாதங்களுக்குப் பிறகு, இந்தியாவுக்கான அரசமைப்பை உருவாக்கியது.

அதில் அனைத்துத் தரப்பினரின் பிரதிநிதித்துவமும் இடம்பெற்றிருந்தது. விடுதலை பெற்ற ஒரு நாடாக எப்படி நவீன காலத்தை நோக்கி நாம் நகர வேண்டும் என்கிற கூட்டுக் கனவின் அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கப்பட்டது. அன்றைக்கு இந்தியர்களில் படித்திருந்தவர்களின் எண்ணிக்கை 16% மட்டுமே. ஆனால், பெரும் லட்சியவாதத்துடன் கூடிய ஓர் அரசமைப்பு உருவாவதற்கு இது தடையாக இருக்கவில்லை.

அரசமைப்பை உருவாக்கிய மாறுபட்ட அணுகுமுறைகளை- கொள்கைகளைக் கொண்டிருந்த பல்வேறு தலைவர்களும் இந்தியா ஒரு சமூகமாகவும், கூட்டாகவும் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி எப்படி நகர வேண்டும் என்பதையே இலக்காகக் கொண்டிருந்தனர்.

அதற்கு உருவம் கொடுக்கும் வகையிலேயே அனைத்துத் தரப்பினரின் கருத்துகளுக்கும் இடமளித்து, அரசமைப்பை உருவாக்கினார்கள். இவர்களில் நேரு, வல்லபபாய் பட்டேல், அம்பேத்கர், ராஜேந்திர பிரசாத், அபுல் கலாம் ஆசாத், சரோஜினி நாயுடு, ஏன் பாரதிய ஜன சங்கத்தின் நிறுவனர் சியாமா பிரசாத் முகர்ஜியும் அடக்கம்.

**எங்கே தவறவிட்டோம்?-**

அரசமைப்பை ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகளை நெருங்கிவருகிறோம். அரசமைப்பின் முக்கியத்துவத்தையும், அது முன்வைத்த கூட்டுக் கனவுகள் குறித்தும் அடுத்தடுத்து வந்த தலைமுறைகளுக்கு, நமது குழந்தைகளுக்குச் சரியாகக் கடத்தியிருக்கிறோமா என்கிற கேள்வி இன்றைக்கு வலுவாக எழுகிறது.

எத்தனையோ துறைகளில்- வகைகளில் நாம் வளர்ந்திருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஒவ்வொரு இந்தியருக்கும் தான் இந்தியர் என்கிற இயல்பான பெருமை மனதுக்குள் ததும்பிக்கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது.

அதற்குக் காரணம், நாம் அனைவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற உணர்வு மிக வலுவாக இருந்ததுதான். அனைவரிடமும் அந்த உணர்வு ஆழமாக இருந்தது என்று சொல்ல முடியாவிட்டாலும், ஒரு சமூகமாக மேலெழ வேண்டும் என்கிற உணர்வைத் தூண்டும் கிரியா ஊக்கிகளாகச் சிலர் எப்போதுமே இயங்கிவந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய பின்னணியை ஆராய்ந்தால் அரசமைப்பு முன்மொழிந்த மதிப்பீடுகள், அதற்குமறைமுகக் காரணமாக இருந்திருக்கும். அந்த உணர்வை அடுத்தடுத்த தலைமுறைக்கு அழுத்தமாகக் கடத்தி வந்திருக்கிறோமா?

இன்றைக்கு அரசமைப்பு குறித்தும் அரசமைப்பின் முகப்புரை குறித்தும் மக்கள் இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் நிறைய பேசத் தொடங்கியிருக்கின்றன. அரசமைப்பு முன்மொழிந்த மதிப்பீடுகள் எளிதில் பதிலீடு செய்துவிட முடியாதவை. அவை காப்பாற்றப்பட வேண்டும் என்கிற கலந்துரையாடல் உருவாகியிருக்கிறது.

அரசமைப்பின் முகப்புரையை அரசமைப்பின் சாரம் என்றும் சொல்லலாம். அது முன்மொழியும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் சார்ந்த மதிப்பீடுகளை நாம் ஒவ்வொருவரும் மனதில் ஏந்தியிருக்கிறோமா? நமது ஒவ்வொரு பொதுச் செயல்பாடும் இவற்றை உறுதிசெய்வதாகத்தானே இருக்க வேண்டும்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு மட்டுமல்ல, உலகின் சிறந்த அரசமைப்புகளில் ஒன்றை நம் தலைவர்கள் நமக்கு வழங்கிச் சென்றிருக்கிறார்கள். அது வெறுமனே அருங்காட்சியகங்களில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியது அல்ல.

வாக்கு செலுத்துவதில் தொடங்கி, நம் சமூகத்தின் ஒவ்வொரு பொதுச் செயல்பாட்டிலும் எதிரொலிக்க வேண்டியதாகும். அரசமைப்பின் ஆன்மாவை நாம் ஒவ்வொருவரும் உள்வாங்கிக் கொண்டு, ஒவ்வொரு பொதுச் செயல்பாட்டிலும் அதைப் பின்பற்றுவதும் நடைமுறைப்படுத்துவதுமே அதன் மேன்மையைக் கடத்துவதற்கான ஒரே வழி.

# ஈரான்- இஸ்ரேலிய போர் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கம்

கலாநிதி. ஏ. எல். எம். அஸ்லம்
(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)

ஈரான் - இஸ்ரேல் போரின் விரிவாக்கம் மற்றும் ஆப்பிரிக்காவின் தெற்கு கடற்கரையில் கப்பல்களை மாற்றியமைப்பது கப்பல் செலவுகளை நூறு சதவீதத்திற்கும் மேலாக அதிகரிக்கும். சர்வதேச விலையேற்றம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தும். எரிபொருள், உணவு, உரம், மூலப்பொருள் இறக்குமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது. சர்வதேச விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்து பொருட்களின் கிடைப்பனவுத்தன்மை மற்றும் செலவுகள் மோசமாகப் பாதிக் கப்படும். நமது நாட்டின் இறக்குமதி செலவுகள் விண்ணை முட்டும். சுருக்க மாக இந்தப் போர் நீடித்தால் இலங்கை மற்றுமொரு பொருளாதார நெருக்கடி யைச் சந்திக்க நேரிடும். பல மாதங்களாக தொடரும் காசா போர் தீவிரமடைந்து பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளை மூழ்கடித்து வருகின்ற நிலையில் ஈரான்- இஸ்ரேலிய போர் ஒரு பிராந்திய போராக மாறி சர்வதேச கப்பல் மற்றும் வர்த்தகத்தை சீர்குலைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஏற்கனவே இஸ்ரேல்- காசா போரால் செங்கடல் வழியாக கப்பல் போக்குவ ரத்து ஆபத்தானதாகிவிட்டதால், மீண்டும் ஈரான்- இஸ்ரேலியப் போர் தீவிரம டைந்ததன் உடனடி தாக்கம் கப்பல் போக்குவரத்தில் பாரிய இடையூறு ஏற்ப டும். செங்கடல் வழியைப் பயன்படுத்தி கப்பல்கள் மீது ஏமனின் ஹூதி படைகள் நடத்திய தாக்குதல்கள், ஆப்பிரிக்காவின் தெற்கு முனை வழியாக செங்கடலைப் பயன்படுத்தி கப்பல்களை திருப்பி அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது புதிய போரினால் மேலும் திவிரமடையலாம் என்று புவியியல் சார் பொருளியல் வல்லுனர்கள் எதிர்வு கூறுகின்றனர். இது எரிபொருள், உரம் மற்றும் உணவு இறக்குமதி செலவுகளை அதிகரித்து சர்வதேச விநியோகச் சங்கிலியை சீர்குலைக்கும். சர்வதேச வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்படலாம்.

ஆபிரிக்காவின் தெற்குக் கரையோரத்தில் கப்பல்களை ஆசியாவிற்கு திருப்பி அனுப்புவது கப்பல் செலவுகளை உடனடியாக 100 சதவிகிதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது. இது புதியபோரின் எதிர்வினையால் மேலும் அதிகரிக்கலாம். எரிபொருள், உணவு மற்றும் உர விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்துள்ளன. இதன் விளைவாக சர்வதேச பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயரும். நாட்டின் இறக்குமதி விநியோகம் மற்றும் செலவுகள் பாதிக்கப்படும்.

இறக்குமதி விலை அதிகரிப்பு என்பது மக்கள் எதிர்க்கும் மதிப்பு கூட்டப்பட்ட வரி காரணமாக ஏற்படும் செலவுகள் அதிகரிப்பதை விடவும் இறக்குமதி விலைகளின் சதவீதமாக இறக்குமதி வரிகள் அதிகரிப்பதனைக் குறிக்கும்.

பீப்பாய் ஒன்றுக்கு 80 அமெரிக்க டாலர்களாக இருந்த எண்ணெய் விலை எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பால் உடனடியாக உயரவில்லை. அமெரிக்காவிலும் கனடாவிலும் அதிகரித்த எண்ணெய் உற்பத்தி விலையை உறுதிப்படுத்தியது. இருப்பினும் எண்ணெய் விலைகள் ஒரு பீப்பாய் சுமார் 90 அமெரிக்க டொலராக ஆக அதிகரிக்கக்கூடும். ஏனெனில் விநியோகம் குறைக்கப்படுவதற்கு பதிலாக அதிக கப்பல் செலவுகள் ஆகும். மறுபுறம் ஈரான் சில நேரங்களில் தமது எண்ணை விநியோகத்திதை மட்டுப்படுத்த முனையும்போதும் இந்நிலை தோன்றலாம். இருப்பினும் வரும் வாரங்களில் பெட்ரோலியப் பொருட்களின் விலை கடுமையாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எரிபொருள் விலை அதிகரிப்பு, குறிப்பாக உரம், கோதுமை, மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் காரணமாக பல அத்தியாவசிய இறக்குமதிகளின் விலைகளும் அதிகரிக்கும். இலங்கையைப் பொருத்த மட்டில் 2024ம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த காலத்தில் உரத்தின் விலை அதிகரிப்பு அவ்வளவு ஆராக்கியமானதல்ல.

எனவே ஈரான்-இஸ்ரேலியப் போர் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய விளைவுகள் ஏற்படுத்தலாம். மோதலின் விரிவாக்கம் மற்றும் அதன் நீடிப்பு உலகப் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் மற்றும் இலங்கையின் பலவீனமான பொருளாதாரத்திற்கு தாங்க முடியாத கஷ்டங்களை ஏற்படுத்தும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பாக வெளிநாட்டு நிதியத்தின் மீதான தாக்கம் பேரழிவை ஏற்படுத்தும். இறக்குமதி செலவுகள் கடுமையாக உயரும் மேலும் வர்த்தக பற்றாக்குறையை அதிகரிக்க ஏற்றுமதி குறையும். அத்தியாவசிய இறக்குமதி செலவுகள் மலிவு விலைக்கு மேல் உயரலாம். நாடு மற்றொரு கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் தள்ளப்படலாம்.

இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு வாழ்க்கைச் செலவுகள் மற்றும் பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திச் செலவுகள் ஆகியவற்றின் மீது அடுக்கடுக்கான தாக்கத்தை ஏற்படுத்தும். இது போக்குவரத்து செலவுகள் சமையல் செலவுகள் மற்றும் அதையொட்டி, பொது விலைமட்டத்தினை அதிகரிக்கும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவின் விலை அதிகரிக்கும். இது சுழல் பணவீக்கத்தின் ஒரு தீய சுழற்சியைத் தூண்டும்.

எரிபொருள், உரம் மற்றும் போக்குவரத்துச் செலவுகளின் அதிகரிப்பு உணவுப் பொருட்களின் உற்பத்திச் செலவுகளை அதிகரித்து பணவீக்க அழுத்தங்களைச் சேர்க்கும். இதையொட்டி உற்பத்திச் செலவுகளும் பல்வகை பொருட்களின் விலையும் பெரும்பாலான மக்களின் கொள்வனவு சக்தியை தாண்டி உயரும். இதனால் வேலையில்லா திண்டாட்டம் மற்றும் வறுமையும் ஏற்படும்.



**மேற்கு ஆசியாவில் விரிவடையும் போர், நாட்டின் வெளிப்புற நிதியை மோசமாகப் பாதிக்கலாம் மற்றும் பொருளாதாரம் மற்றும் மக்கள் மீது தாங்க முடியாத நிதிச் சுமைகளைக் குவிக்கலாம். அத்தியாவசியப் பொருட்களின் அதிக இறக்குமதிச் செலவுகள் நாட்டின் கொடுப்பனவு சமநிலையை நெரித்து, கையிருப்புகளை நீடிக்க முடியாத அளவிற்கு அரித்துவிடும்.**

நாட்டின் வர்த்தக சமநிலை மீதான தாக்கம் நீடிக்க முடியாததாக இருக்கலாம். குறிப்பாக பெட்ரோலியம் மற்றும் எரிவாயு விலைகள் அதிக அளவில் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதால் இறக்குமதி செலவு கடுமையாக உயரும். சந்தேகத்திற்கு இடமின்றி அதிக விலை காரணமாக பெட்ரோலியம் மற்றும் டீசல் தேவை குறையும் ஆனால் குறைந்த இறக்குமதி இருந்தாலும் இறக்குமதி செலவு அதிகரிக்கும். மறுபுறம் உலக மந்தநிலை காரணமாக கடந்த ஆண்டைவிட ஏற்றுமதி மேலும் சுருங்க வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டு பணம் செலுத்துதலின் இரண்டு பலம் எனக் கொள்ளப்படும் வெளிநாட்டு தொழிலாளர்களின் உள்நோக்கிய பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலாவிலிருந்து கிடைக்கப்பெற்ற வருவாய் என்பன கிட்டத்தட்ட 8 பில்லியன் அமெரிக்க டாலர்களைக் இலங்கைக்குள் கொண்டு வந்து சுமார் 4.7 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற பரந்த வர்த்தகப் பற்றாக்குறையைத் துடைத்தெறிய இவை உதவின. இதன் விளைவாக வெளிகையிருப்பு 4.96 பில்லியன் அமெரிக்க டொலராக ஆக அதிகரித்தது. தற்போதைய உலகளாவிய நிலைமைகளின் அடிப்படையில் மேற்கு ஆசியாவின் தற்போதைய பாதுகாப்பின்மையால் இலங்கையின் இந்த வெளிப்புற நிதி ஆதாரங்கள் பாதிக்கப்படும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

உள்நோக்கிய பணப்பரிமாற்றங்களில் பாதிக்கும் மேலானது மேற்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து வருவதாகும. மோதல் தீவிரமடைந்தால் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு இப்பகுதி பாதுகாப்பற்றதாகிவிடும். இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கின் அரபு நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் திரும்பி வருவதற்கு முயற்சிப்பார்கள் இது அவர்களிடமிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை மோசமாக பாதிக்கும். தென் கொரியா, ஜப்பான் மற்றும் மேற்கத்திய நாடுகள் போன்ற நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தின் மற்ற பாதி பாதிக்கப்பட வாய்ப்பில்லை. இன்னும் பல பில்லியன் அமெரிக்க டாலர்கள் குறைவது தவிர்க்க முடியத ஒன்று வர்த்தகப் பற்றாக்குறை விரிவடையும்.

வெளிப்புற நிதிகளுக்கான வலிமை யின் மற்ற ஆதாரம் சுற்றுலா ஆகும். இது விமானப் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்கள் மற்றும் விமானப் பயணத்தின் அதிக செலவுகளால் பாதிக்கப்படலாம். கடந்த ஆண்டு சுற்றுலாத் துறையில் இருந்து 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வருவாய் ஈட்டியது. கோவிட் மற்றும் விருந்தோம் பல் நிலைமைகளிலிருந்து பின்னடைவைக் கொண்டிருந்த சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சியை இது சுட்டிக்காட்டிய போதும் ஈரான்-இஸ்ரேல் போர் இந்நி லைமையை மேலும் பாதிக்கும். ஏனெ னில் போர் வலயத்தின் ஊடாக விமானப் போக்குவரத்திற்கு ஏற்படும் ஆபத்துகள் மற்றும் எரிபொருள் விலை உயர்வினால் விமானக் கட்டணங்கள் அதிகரிப்பது சுற்றுலாத்துறைக்கு கடும் பின்னடைவை ஏற்படுத்தும்.

மறுபுறம், ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து தப்பிச் செல்லும் மக்கள் மற்றும் பாதுகாப்பைத் தேடும் பணக்கார அரேபியர்கள் சுற்றுலாவை மேம்படுத்த முடியும். மேலும் கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியா மற்றும் கிழக்கு ஆசியாவில் இருந்து வருகின்றனர். அவர்கள் அடுத்த ஆண்டு சுற்றுலா வருவாயில் நிலையானதாக இருக்க முடியும்.

மேற்கு ஆசியாவில் விரிவடையும் போர், நாட்டின் வெளிப்புற நிதியை மோசமாகப் பாதிக்கலாம் மற்றும் பொருளாதாரம் மற்றும் மக்கள் மீது தாங்க முடியாத நிதிச் சுமைகளைக் குவிக்கலாம். அத்தியாவசியப் பொருட்களின் அதிக இறக்குமதிச் செலவுகள் நாட்டின் கொடுப்பனவு சமநிலையை நெரித்து, கையிருப்புகளை நீடிக்க முடியாத அளவிற்கு அரித்துவிடும். இறக்குமதி விலைகளில் கூர்மையான அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதியில் மேலும் சரிவு ஆகியவை வர்த்தக பற்றாக்குறையை விரிவுபடுத்தும். இது செலுத்தும் சமநிலையை கஷ்டப்படுத்தும்.

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணம் கடந்த ஆண்டு 5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும் என்று நம்புகிறோம். மேலும் சுற்றுலாப் பயணிகளின் வருமானம் தொடர்ந்து எழுச்சியைத் தொடரும் மற்றும் சுமார் 4 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும் ஏன்றும் எதிர்பார்க்கிறோம். இவை வெறும் காணல் நீராகிவிடும் ஈரான்- இஸ்ரேல் போரின் காரணமாக. எவ்வாறாயினும். இந்த இரண்டு ஆதாரங்களும் பிராந்தியத்தில் போரின் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படலாம் என்பதே உண்மை.

வளைகுடாப் பிராந்தியத்தில் யுத்தம் ஓய்ந்து பிராந்தியத்தின் பாதுகாப்பின்மையை மீட்டெடுக்காவிட்டால் இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் பயங்கரமானதாக இருக்கும்.

# தேர்தலில் மக்களின் ஈடுபாடு: கருத்தியல் யுத்தமா? வாழ்வாதார பிரச்னைகளா?

**ராஜன் குறை**

இந்திய அரசியலில் இதுவரை இல் லாத அளவுக்குக் கூர்மையானதொரு கருத்தியல் யுத்தமாக 2024 நாடாளுமன்றத் தேர்தல் அமைந்துள்ளது. இரண்டு அணிகள். என்டிஏ என்ற பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி. இன்டியா என்ற காங்கிரஸ் முக்கிய பங்கேற்கும் இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கக் கூட்டணி.

இரண்டு அணிகளிலுமே பல முக்கிய கட்சிகளும் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு விட்டன. காங்கிரஸ், பாஜக ஆகிய இரண்டு முக்கிய தேசிய கட்சிகளும் அறிக்கைகளை வெளியிட்டு விட்டன. அவற்றிலிருந்து நாம் கருத்தியல் வேறுபாட்டை கீழ்கண்டவாறு புரிந்து கொள்ளலாம்.

**என்டிஏ என்பதன் கருத்தியல்:**

பெருமுதலீட்டிய வளர்ச்சி, கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள், பார்ப்பனீய - இந்துத்துவ தேசிய கலாச்சார ஆதிக் கம், ஒன்றிய அரசை ஒற்றை தேசிய அரசாக மாற்றி அதிகாரத்தை ஒரே புள்ளியில் குவிப்பது. அதற்கு ஏற்றாற்போல இவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள முக்கியமான கருத்தியல் சார்ந்த முடிவுகள் “ஒரே நாடு, ஒரே தேர்தல்” திட்டத்தை நடைமுறைப்படுத்துவது, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது போன்றவை.

**“இன்டியா” என்பதன் கருத்தியல்:**

அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, மக்கள் நலன் நோக்கு, ஏழ்மை ஒழிப்பு, பன்மைத்துவ கலாசாரம், மதச்சார்பின்மை, மத நல்லிணக்கம், கூட்டாட்சி அதிகாரப் பகிர்வு, மாநில உரிமைகளைப் பாதுகாத்தல். அதற்கு ஏற்றாற்போல அவர்கள் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் சமூக நீதி, பொருளாதார நீதி, கூட்டாட்சி நீதி சார்ந்தவை.

காங்கிரஸின், இந்தியா கூட்டணி கட்சிகளின் கருத்தியல் பரந்துபட்ட மக்கள் நலன் சார்ந்ததாகவும், முற்போக்கானதாகவும் இருந்தாலும் ஊடகங்கள், குறிப்பாக வடநாட்டு, ஆங்கில மொழி ஊடகங்கள் பாஜக-வே வெற்றி பெறும் என்றும், பிரதமர் மோடியை பெரும்பாலோனார் பிரதமராகத் தொடர விரும்புகின்றனர் என்றும் கருத்துக் கணிப்பு மற்றும் கருத்துத்திணிப்பு களை தொடக்கம் முதலே வெளியிட்டு வருகின்றன.

இந்தக் கணிப்பு - திணிப்புகளில் என்ன பிரச்சினையென்றால் கருத்தியல் சார்ந்த விவாதங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதுதான். தேர்தலின் முடிவுகள் குறித்து ஆருடம் சொல்கிறார்களே தவிர, இரண்டு அணிகளில் எதன் கருத்தியல் நோக்கு நாட்டுக்கு நல்லது என்பதை விவாதிப்பதில்லை.

**மக்களுக்கு கருத்தியலில் அக்கறையில்லையாம்!**

தேர்தல்கள் குறித்த விவாதங்கள் பலவற்றில் ஒரு கருத்து பரவலாக முன்வைக்கப்படுகிறது. அது என்னவென்றால் சாமானிய மக்களுக்கு அவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகள்தான் முக்கியமானவை. வேலையில்லா திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகள்தான் மக்களின் அன்றாட வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதனால் ஏழை எளியவர்களுக்கு இந்துத்துவமா, மத சார்பின்மையா, பார்ப்பனீயமா, சமூக நீதியா, ஒன்றிய அரசின் மேலாதிக்கமா, கூட்டாட்சி தத்துவமா, ஒற்றை பண்பாட்டு தேசி யமா, மாநில உரிமைகளா என்பதிலெல் லாம் அக்கறை கிடையாது. அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகள்தான் முக்கியம். குடிநீர், சுகாதாரம், உணவு, உடை, வசிப்பிடம் என்பதெல்லாம் முக்கிய பிரச்சினைகள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது.

மேலும், கருத்துச் சுதந்திரம் இருக்கி றதா, ஊடகங்களின் குரல்கள் நசுக்கப் படுகின்றனவா, சட்டத்தின் ஆட்சி நடக்கிறதா, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்கு ஆளும் கட்சி பதில் அளிக்கிறதா, பிரதமர் பத்திரிகையாளர்களை சந்திக்கி



றாரா என்பதெல்லாம் எளிய மக்களின் அக்கறைகளுக்கு அப்பாற்பட்டவை என்றும் அறிவுஜீவிகளால் கூறப்படுகிறது. இதெல்லாம் உண்மை என்றே எடுத்துக் கொள்வோம். ஆமாம், ஏழைகளுக்கு, தினக்கூலி தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம்தான் முக்கியப் பிரச்சினை. அவர்களில் பெரும்பாலோருக்கு கருத்தி யல் சிந்தனைகளை படித்தறிய, விவா திக்க வாய்ப்போ, நேரமோ இல்லை என்பது உண்மைதான்.

ஆனால், இங்கேதான் முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது. சமூகத்தில் அறிவு ஜீவிகள், சிந்தனையாளர்கள், அரசியல் வாதிகள் ஆகியோரது வேலை என்ன? அது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், கருத்தியலுக்கும் உள்ள தொடர்பை மக்களிடம் எடுத்துக் கூறுவதுதானே? அந்தப் பணியை அவர்கள் செய்கிறார் களா, இல்லையா என்பதை பொறுத்துத் தானே மக்களாட்சி தழைக்கும்?

மக்களுக்கு வாழ்வாதாரம்தான் பிரச்சினை என்பதால் பார்ப்பனீயச் சொல் வடை சொல்வதுபோல அவர்களுக்கு “ராமன் ஆண்டாலும், ராவணன் ஆண்டாலும்” ஒன்றுதான் என்றால், நாம் எதற்காக தேர்தல்களையும், மக்களாட்சியையும் நம்ப வேண்டும்? எதற்காக கல்விக் கூடங்கள், ஊடக அலசல்கள், அரசியல் கட்சி பிரசாரங்கள்? எதற்காக தொழிற் சங்கங்கள், விவசாயிகளின் இயக்கங்கள், மாணவர் அமைப்புகள், மாதர் சங்க அமைப்புகள்?

இதைத்தான் அறிஞர் அண்ணா பணத் தோட்டம் நூலிலே அழகாக எடுத்துக் கூறுகிறார். “வயலோரத்திலே இருப்பவனுக்கு தான் திராவிடன் என்று தெரியாது. ஏழை என்பது தெரியும். நமக்கோ இரண்டும் தெரியும்.

ஆலையிலே உள்ளவனுக்கு ஆரிய-திராவிட பிரச்சினை அர்த்தமற்ற கூச்ச லாகவே தெரியும். அவனுக்கு தன் அன் றாடக் கஷ்டம்தான் தெரியும். நமக்கோ அந்த இரண்டும் தெரியும்.

அவர்கள் நம்மை மறப்பது ஆச்சர்யமல்ல. நாம் அவர்களை மறப்பது மன்னிக்க முடியாத குற்றம். நம்மை அவர்கள் அறியார்கள்! நாம் அவர்களை அறிவோம்! அறிவதால் அவர்களுக்குப் பணிபுரிவோம்!”

பணிபுரிவதென்றால் என்ன? அவர் கள் போராட்டங்களில் பங்கேற்பது, அவர்களிடமும் கருத்தியல் சிந்தனையை உருவாக்குவது. கருத்தியல் தெளிவில்லா மல் வாழ்வாதாரப் பிரச்சினையை தீர்ப்ப தெப்படி என்பதே கேள்வி. இதைப் புரிந்துகொள்ள இரண்டு காணொலி களை விவாதிப்போம்.

**கருத்தியல் தீர்மானிப்பதே வாழ்வாதாரம்!**

நான் பார்த்த ஒரு காணொலியில் நீல கிரி தொகுதியில் போட்டியிடும் தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராஜா அவர்களிடம் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் கொடுப்பதைக் குறித்து கேட்கிறார்கள். அவர் அதற்கு எளிமையாக பதில் சொல்கிறார்.


இயற்கை வளங்கள் என்பவை, அதா வது நிலம், நீர், காற்று உள்ளிட்ட அனைத்தும் அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானவை. ஆனால், மனித சமூகத் தில் சிலர் அதிக சொத்துகளைக் குவித்துக்கொண்டு, அதிக வருமானத்தை ஈட்டிக்கொண்டு இருக்கும் ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதனால் அரசு அவர்க



ளுக்கு வரி விதித்து, அந்த வரியினை ஏழை மக்க ளுக்கு உதவ பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறார். இதுதான் சோஷலிச கருத்தியல். இதை மக்களுக்கு எடுத்துக் கூறுவது கடினமா என்ன?

இன்னொரு காணொலியில் பர்க்கா தத் என்ற ஊடகவியலாளர் CSDS-Lokniti என்ற அமைப்பை சேர்ந்த பேராசிரிய ரிடம் உரையாடுகிறார். அந்த அமைப்பு மக்களிடையே விரிவாக கருத்துக் கணிப்பு நடத்தி வெளியிட்டுள்ளது. அந்தப் பேராசிரியர் எளிய மக்களுக்கு வேலை இல்லாமை, விலைவாசி ஏற்றம் ஆகியவைதான் பிரச்சினை. எதிர்க் கட்சிகள் அதைப் புரிந்துகொண்டு பேசு வதில்லை என்கின்றார்.

இது போன்ற ஆங்கில உரையாடல்களில் இந்த மேட்டுக்குடியினர் மொத்த




பொறுப்பையும் எதிர்க்கட்சிகள் மீது சுமத்துவதும், பழி போடுவதும் வியப்பிற்குரியது. இவர்களுக்குத் தெரியும் பாஜக கார்ப்பரேட்களுக்கு எவ்வளவு வரிச்சலுகை அளிக்கிறது, வாராக்கடன் களை தள்ளுபடி செய்கிறது என்று. அவற்றை தவிர்த்து பெட்ரோல் மீதான வரியை குறைத்தால் விலைவாசி குறை யும் என்று. இதை எதிர்க்கட்சிகள் கூறினால் அவர்கள் மக்களுக்குப் புரியாத கருத்தியலை பேசுவதாகக் கூறுகிறார்கள்.

**சமூக நீதி குறித்து மக்களுக்கு அக்கறையில்லையா?**

தேர்தலுக்கு பல மாதங்கள் முன்பி ருந்தே “இன்டியா” கூட்டணி கட்சிகள் ஒரு முக்கியமான அம்சத்தை வலியுறுத்தி வருகின்றன. அது என்னவென்றால், ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக் கெடுப்பு. பாஜக அரசு 2021-ம் எடுக்கப் பட வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பையே எடுக்கவில்லை. அதை எடுப்பதுடன், அதில் ஜாதிகளையும், பொருளாதார சூழலையும் சேர்க்க வேண்டும் என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

எதனால் ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு என்றால், எழுபதாண்டு காலமாகியும் நமது குடியரசில் செல்வாக்கு மிக்க பதவிகளில் ஆதிக்க ஜாதியினரே பெருமளவில் உள்ளனர் என்பதுதான். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஜாதியினர் அரசியல் பிரதிநிதித்துவத்தில் இடம் பெற்றாலும், கல்வி, திறன்கள் பெறுவதிலும், சமூகத்தில் அதிகாரமிக்க தொழில்களில், பதவிகளில் இடம்பெறுவதும் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

உதாரணமாக ஒன்றிய அரசுத் துறைகளை நிர்வகிக்கும் செயலர்களில் பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் மூன்று சத விகிதம் பேரே உள்ளனர் என்பதை ராகுல் காந்தி சுட்டிக் காட்டியுள்ளார். இது எதைக் காட்டுகின்றது என்றால் பழைய வர்ண தர்ம சிந்தனை உரு ாக்கிய படிநிலை அமைப்பு பல்வேறு நுட்பமான வகைகளில் இன்றும் தொடர்கிறது என்பதைத்தான். இதனை எப்படி மாற்றியமைப்பது என்பதை சிந்திக்கத்தான் விரிவான தரவுகளை உள்ளடக்கிய மக்கள் தொகை கணக்கெடுப்பு தேவைப்படுகிறது.

அது மட்டுமல்லாமல் காங்கிரஸ் மற்றும் இன்டியா கூட்டணி கட்சிகள் இட ஒதுக்கீட்டுக்கான அதிக பட்ச வரம்பு 50 வீதம் என்பதை தேவைக்கேற்ப உயர்த்த வேண்டும் என்றும் கூறுகின்றன.

பாஜக இந்த முக்கியமான பிரச்சினை யில் எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை. அவர்கள் ஜாதிவாரி கணக்கெடுப்பை செய்ய விரும்பவில்லை என்பது தெளி வானது. அதேபோல இட ஒதுக்கீட்டு வரம்பை உயர்த்துவதிலும் அவர்களுக்கு நாட்டம் கிடையாது. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான இட ஒதுக்கீட்டை, முன்னேறிய வகுப்பினருக்கு மட்டுமானது என்று வரையறுத்தது பாஜக அரசு. ஆனால், காங்கிரஸ் அதை அனைத்து வகுப்பினருக்குமானதாக மாற்ற உறுதியளித்துள்ளது.

இந்த சமூக நீதி அம்சங்களைக் குறித்து CSDS-Lokniti கருத்துக்கணிப்பில் எதுவும் கேட்கப்பட்டதாகவே தெரிய வில்லை. இப்போதுள்ள இட ஒதுக் கீட்டு விகிதம் போதுமானதா, மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் கருத்துக்கணிப்பில் கேட்கலாமே. வேலையின்மை குறித்து கேட்கிறார்கள். அதை முன்னேறிய வகுப்பினர், பிற்படுத் தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று பல வகுப்பினரிடமும் கேட்கிறார்கள். அப்படியே அவர்களிடம் இட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டுமா என்றும் கேட்கலாமே? ஜாதிவாரி கணக்கெடுப்பு தேவையா என்றும் கேட்கலாமே?

வழமையாகச் சொல்வதுபோல இந்திய சமூகத்தில் ஈராயிரம் ஆண்டு களாக நிலைபெற்ற கருத்தியல் என்பதே ஜாதீயம்தானே? பார்ப்பனீயம்தானே? அதை எப்படி எதிர்கொள்வது, சீர் செய்வது என்பதுதானே சமூக நீதி கருத்தியல்? இதனைக் குறித்து கருத்துக்கணிப்பு நடத்தாமல், யார் உங்களுக்குப் பிடித்த பிரதமர் வேட்பாளர் என்று கருத்துக்கணிப்பு நடத்துவதால் என்ன பயன்?

**மக்களின் அன்றாட வாழ்வை, வாழ்வாதாரத்தை தீர்மானிக்கும் கருத்தியல்**

ஊடகங்களோ, உயர்தட்டு அறிவு ஜீவிகளோ செய்யாவிட்டாலும் நாம் எந்தெந்த அம்சங்களில் இந்தத் தேர்த லில் கருத்தியல் மோதல் நிகழ்கிறது என்பதை புரிந்துகொள்வோம். அதற்கு உதவும் சிறிய அட்டவணையை தொகுத் துக் கொள்வோம். எல்லா அம்சங்க ளையும் பேச முடியாவிட்டாலும் முக்கியமான புள்ளிகளாவது தெளிவாக இருக்க வேண்டும்.

இந்த கருத்தியல் வேறுபாடுகள் எல்லாமே மக்களின் அன்றாட வாழ்வை, வாழ்வாதாரத்தை பாதிப்பவைதான். அதை மக்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்வதுதான் படித்தவர்களின், குடி மைச் சமூகத்தின், ஊடகத்தின், அரசியல் கட்சிகளின் கடமை. மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பார்கள். மக்கள் முன் இந்த வேறுபாடுகளை தெளிவாக வைத்த பின், அவர்கள் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதுதான் சரியான மக்களாட்சி. இவற்றை பேச மறுத்து தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை மட்டுமே பேசுவது பொறுப்புள்ள செயல் அல்ல.